# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,898—1970 මාර්තු 20 වැනි සිකුරාදා—1970.3.20

14,898 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு மாச்சு மாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 97 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 102 | வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 105 | விதிச செயற்குழுவின் அறிவித்தல்கள் .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | 112 | நாணவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### களுத்துறை நகர சபை

#### களியாட்டவரிக் கட்டளைச் சட்டம்

(267 ம அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் களுத்துறை நகர சபையினுல் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினுல், அப்பிரிவின (2) ம் உட்பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகின்றது.

#### தீர்மானம்

"சபையின் நிருவாக எல்லைகளுக்குள் நடத்தப்படும் (கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறன) களியாட்டங்களுக்கான அனுமதிக் கட்டணங்கள்மீது 1947 பெப்ருவரி 26 ந் திகதிய 9,672 ம் இலக்க, 1969, மே 22 ந் திகதிய 14,855 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றுக்களில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானத்திஞல் அக்கட்டணங்கள் மீது விதித்து அறவிடப்பட்ட வரிக்குப் பதிலாக, இதன் கீழ் காட்டப்பட்டுள்ள விகிதங்களின் படியான ஒரு வரியை இச்சபை இத்தீர்மானம் கசெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவினகீழ் இத்தால் விதித்து அறவிடுகின்றது :

#### கட்டணத் தொகை

வரித்தொகை நீங்கலாக அனுமதிக்கட்டணம்

| | வரி விகிதம் ரூ. ச. |
|---|---|
| (அ) 20 சதத்துக்கு மேற்படவும் ஆனல் 40 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 05 |
| (ஆ) 40 சதத்துக்கு மேற்படவும் ஆனல் 99 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 10 |
| (இ) 99 சதத்துக்கு மேற்படவும் ஆனல் 1.50 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 25 |
| (ஈ) 1.50 ரூபாவுக்கு மேற்படவும் ஆனல் 2.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 35 |
| (உ) 2.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனல் 2.50 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 50 |
| (ஊ) 2.50 ரூபாவுக்கு மேற்படவும் ஆனல் 3.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 65 |
| (எ) 3.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனல் 4.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 75 |
| (ஏ) 4.00 ரூபாவுக்கு மேற்படுமிடத்து கொடுப்பனவின் 20 சதவீதம் .. .. .. | — |

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஞு மார்ச்சு மீ 2 ந் உ.

3-478—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஞு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (2)ம் பிரிவால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

ஆர். பிரேமதாச,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 27 ந உ.

### கட்டளை

1968 யூன் 21 ந திகதிய 14,806/20 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அனுராதபுர மாவட்டத்து கலாகம்பலாத்தை வடக்குக் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள மாமினியக்கோறளைக் கிராமப் பிரதேசத்தை மாமினியக் கோறளை வடக்கு, மாமினியக்கோறளை தெற்கு ஆகிய இரண்டு புதிய கிராமப் பிரதேசங்களாகப் பிரிவினை செய்வதை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு அவசியமான கருமங்களுக்கு இதனோடுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்ட விதத்திலான ஏற்பாடு இத்தால் செய்யப்படுகின்றது.

### அட்டவணை

1. புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றினதும் கிராமச் சபை அந்தப் புதிய கிராமப் பிரதசம் பற்றிய கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்கும், பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பின்னுரித்தாளியாக இருக்கும்.

2. 1968 திசெம்பர் 31 ல் நடைமுறையிலிருக்கும் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்ட துணைவிதிகள் யாவும் இத்துணைவிதிகள் அப்புதிய கிராமப் பிரதேசத்துடன் சம்பந்தப்பட்ட வரையில் புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றிலும் தொடர்ந்து நடைமுறையில் இருக்கவேண்டுவதுடன் அவை அப்புதிய கிராமப் பிரதேசத்து கிராமச் சபையால் ஆக்கப்பட்டனவாகக் கருதப்படவும் வேண்டும்.

3. 1968 திசெம்பர் 31 ல் பழைய கிராமப் பிரதேசத்து கிராமச் சபையில் சமுதாய நிதியின் வரவில் உள்ள தொகை 1969 சனவரி 1 இன் (மின்சாரக் கணக்குநீங்கலாக) அரைப்பங்குகளாகப் பிரிக்கப்பட்டு மாமினியக்கோறளை வடக்கு மாமினியக் கோறளை தெற்கு ஆகிய புதிய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளின் சமுதாய நிதிகளில் வரவுவைக்கப்படல் வேண்டும்.

4. 1968 திசெம்பர் 31 ல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த அல்லது அதன் ஆதிக்கத்தின் கீழிருந்த பின்வரும் அசைவுள்ள சொத்துக்கள் 1969 சனவரி 1 ல் மாமினியக் கோறளை தெற்குக் கிராமப் பிரதேசத்து சபைக்கு உரித்தாக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டுவதுடன் பழைய கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த அல்லது அதன் ஆதிக்கத்தின் கீழிருந்த எஞ்சியுள்ள அசைவுள்ள சொத்து எதுவும் மாமினியக் கோறளை வடக்குக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படவும் வேண்டும்.

1 அனுமாரி
1 எழுதுமேசை
1 எழுதுமேசை
10 கதிரைகள்

5. 1968 திசெம்பர் 31 ல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த அல்லது அதன் ஆதிக்கத்தின்கீழிருந்த காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற ஒவ்வொன்றும் 1969 சனவரி 1 இன் எப்புதிய கிராமப் பிரதேசத்தினுள் அக்காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து அமைந்திருக்கின்றதோ அப்புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படல் வேண்டும்.

6. பழைய கிராமப் பிரதேசத்து கிராமச் சபையின் உரிமைகள், கடன்கள், பொறுப்புகள், கடப்பாடுகள் அனைத்தும், அவை புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை ஒவ்வொன்றுடனும் சம்பந்தப்பட்ட வரையில் அப்புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு மாற்றப் பட்டிருப்பனவாகக் கருதப்படல் வேண்டும்.

7. பழைய கிராமச் சபையினால் வைத்திருக்கப்பட்ட கோப்புகள், பதிவுகள் பத்திரங்கள் அனைத்தும், அவைகள் ஒவ்வொரு புதிய கிராமப் பிரதேசத்துடனும் சம்பந்தப்பட்டவரையில் 1969 சனவரி 1 லிருந்து அப்புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு மாற்றப்பட்டிருப்பவையாகக் கருதப்படல் வேண்டும்.

8. பழைய கிராமச் சபையில் சேவையாற்றிய ஊழியர்களுக்கு இளைப் பாற்றிச் சம்பளம் வழங்குவதன் பொருட்டுச் செலுத்தப்பட்ட உதவு தொகைகள் சம்பந்தமான பழைய கிராமச் சபையின் பொறுப்பு மாமினியக்கோறளை தெற்கு, மாமினியக் கோறளை வடக்கு ஆகிய புதிய கிராமப் பிரதேசங்களினது கிராமச் சபைகளிடையே 1 : 1 ஆகிய விகிதாசாரத்தில் பிரிக்கப்படல் வேண்டும்.

9. இந்த அட்டவணையில்—

"புதிய கிராமப் பிரதேசம்" என்பது வேறு விதத்தில் குறிப் பிடப்பட்டாலன்றி 1968 யூன் 21 ன் 14,806/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளின் விபரிக்கப் பட்டுள்ள சந்தர்ப்பத்துக்கேற்ப மாமினியக்கோறளை தெற்கு, மாமினியக் கோறளை வடக்கு, ஆகிய கிராமப் பிரதேசங்கள் எனப் பொருள்படும்.

"பழைய கிராமப் பிரதேசம்" என்பது புதிய கிராமப் பிர தேசங்களாக வருவதற்கு முன்பிருந்த மாமினியக்கோறளைக் கிராமப் பிரதேசமெனப் பொருள்படும்.

3–444—20.3.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## பெல்மதுலைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

### 1970 க்கான விசேட மலகூடவரி

(256 ஆம் அதிகாரமாம்) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) ஆகிய பிரிவின்படியும் அப்பிரிவினுல் அன்னாருக்கு அளிக்கப்பட்ட தத்துவ பலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் வழங்கிய அனுமதியுடனும், துணைவிதிகளினுல் விதிக்கப்படக்கூடியனவாய வரம்புகளுக்கும் விதி விலக்குகளுக்கும் அமைவாகவும், பெல்மதுலைப் பட்டினத்துள் அமைந் துள்ளனவும் இதனகத்தேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டிருப்பனவு மான நிலையான ஆதனங்கள் சகலவற்றினதும் வருடாந்தப் பெறு மதியில் நூற்றுக்கு மூன்று வீதமானதும், முறையே மார்ச்சு 31 ஜூன் 30 செத்தெம்பர் 30, திசம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட மலகூட வரியை 1970 ஆம் ஆண்டுக்குப் பெல்மதுலைப் பட்டின சபை விதித்திருக் கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 4 ந உ.

### அட்டவணை

பின்வரும் மதிப்பீட்டிலக்கங்களை உள்ளடக்கிய பிரதேசம் :—

#### 2 ம் வட்டாரம்—வித்தியாலய பெதஸ

குட்டப்பிட்டி வீதி : 17, 17/1, 19, 19/1, 21, 23, 25, 25/1, 27, 29, 31, 31/1, 33, 35, 35/1, 37, 39, 41, 43, 45, 47, 57, 59, 59/1, 61, 63, 63/1, 65/2, 65/3, 65/4, 65/5, 56/8, 56/9, 56/11, 56/12, 65/15, 65/19, 69, 77, 77/1, 79, 81, 8, 12, 14, 14எ, 14பி, 14சி, 14டி, 14இ. 22, 24, 24/1, 24/5, 24/6, 24/7, 28, 34/1, 48, 48/1, 54, 58, 58/1, 58/2, 58/3.

குட்டப்பிட்டி குறுக்குத் தெரு : 1, 5, 7, 9, 11, 11/1, 11/2, 15, 15/1. 15/2, 15/3, 15/4, 17, 19, 21/1, 21/2.

இரத்தினபுரி வீதி : 73, 81, 85, 91, 93எ, 95, 97, 101, 105, 107, 109, 111, 113, 115, 117, 127, 129, 131, 133, 133/1, 135, 137, 110, 112, 114, 116, 118, 132, 134, 136, 148, 158, 162, 164, 166, 168, 170, 194, 194/4, 194/5, 194/6, 196, 198, 200, 204, 206/1. 206/2.

#### 3 ம் வட்டாரம்—கலுகம்முல்லை

போப்பிற்றிய வீதி : 6, 8.

இறக்வானை வீதி : 2, 4, 6, 8, 10, 14, 16, 16/1, 16/2, 18, 22, 22/1, 22/2, 22/2எ, 22/3, 22/8, 22/9, 22/30, 22/31, 22/32, 22/33, 24, 26, 28, 30, 40, 50, 52, 58, 60, 62, 62/1, 62/2, 62/3, 66, 70, 74. 72, 76, 78, 80, 88, 90, 94, 96, 96/1, 100, 102, 108, 110.

இரத்தினபுரி வீதி : 1, 3, 3/1, 11, 11/1, 13, 13எ, 15, 17, 19, 21, 23, 23எ, 25, 27, 31, 33, 35, 37, 39, 41, 43, 47, 49, 51, 53, 55, 57, 69, 61, 61/1.

#### 4 ம் வட்டாரம்—பசார்

பலாங்கொடை வீதி : 3, 5, 7, 11, 15, 17, 19, 21, 23, 25, 27, 31, 33, 35, 39, 41, 45, 45/1, 45/2, 45/3, 45/4, 45/5, 47, 55, 57, 57/1, 59, 61, 61எ, 63, 65, 73, 75, 75/1, 77, 85, 85/1, 85/3, 85/5, 87, 91, 93, 95, 95எ, 97, 101, 103, 103/1, 103/2, 103/3, 105, 105/1, 115, 115/1, 115/1எ, 115/2, 115/3, 115/4, 115/5, 121, 121/1, 123. 125, 4, 14, 18, 22, 24, 24எ, 24/1, 24/2, 28, 30, 32, 34, 36, 38. 40, 42, 50, 46.

இரத்தினபுரி வீதி : 2, 4, 6, 10, 14, 16, 18, 20, 22, 26, 30, 34, 36, 36/2, 36/3, 36/3எ, 36/4, 36/5, 36/6, 36/7, 36/8, 36/9, 36/10, 36/11, 36/12, 36/14, 36/15, 36/16, 36/18, 36/19, 36/20, 36/21,

36/22, 36/23, 36/23எ, 36/23பி, 36/23சி, 36/23டி, 36/23இ, 36/23எப், 36/24, 36/24எ, 36/27, 36/28, 36/30, 36/31, 36/32, 36/38, 42, 44, 48, 52, 58, 60, 66, 70எ, 70பி, 74, 76, 78, 82, 84, 86, 88, 90, 92, 94, 96, 96/1, 96/2, 96/3.

இரக்வானே வீதி : 5, 7, 9, 13, 15, 17, 23, 25, 27, 31, 33, 35, 43, 45, 47.

ஆலய வீதி : 7, 15.

குடாப்பிட்டி சர்குல வீதி : 5, 7, 11, 15, 15/1, 15/2, 15/3, 15/5, 4, 6, 14, 16/1, 16.

### 5 ம் வட்டாரம்—விகாரகமை

பலாங்கொடை வீதி : 60, 66, 68, 70, 72, 74, 76, 78, 80, 84, 84/1, 84/3, 84/4, 84/6, 84/7. 84/8, 84/9, 84/10, 84/11, 86, 86/1, 86/1எ, 86/2, 86/4, 88, 90, 92, 94, 96, 96/1, 96/2, 96/3, 96/4, 96/5, 96/6, 100.

ஆலய வீதி : 6, 14/1, 14/5, 22.

இரக்வானே வீதி : 49, 49எ, 51, 55, 63, 63/1, 71, 73, 81, 81/1, 81/2.

### 7 ம் வட்டாரம்—கெற்றதென்னே

கெற்றதென்னே-மொறதோட்டை வீதி : 3, 5, 7, 9, 11, 15, 17, 21, 23, 25, 29, 31, 33, 35, 37, 39, 41, 43, 53, 61, 73, 77, 79, 83, 85, 87, 89, 6, 8, 12, 16, 16/1, 20, 26, 28, 30, 32, 36, 42, 44, 48, 56, 62, 64, 66, 70, 74, 78, 82, 82/1, 86, 92, 92/4, 92/5, 92/6, 92/7, 92/8, 94, 98, 104, 106, 110, 114.

கமறன்கப்பிற்றி வீதி : 7, 6, 10, 12, 14, 18, 22, 26, 28, 30, 32, 36, 42.

இறக்காவனே வீதி : 473, 473/1, 473/2, 473/3, 475, 477, 479, 481, 481/1, 481/2, 481/3, 481/7, 483/1, 483/2, 483/3, 491, 491/1, 493, 495, 497, 499, 501, 503, 507, 509, 511, 511/1, 515, 517, 525, 531, 543, 545, 545/1, 547, 549, 551, 551எ, 551/1, 551/2, 551/3, 551/4, 551/5, 553, 559, 561, 563, 563/1, 567, 571, 579, 581, 583, 585, 587, 589, 591, 593, 595, 599, 601, 603, 605, 607, 611, 617, 619, 621, 621/1, 627, 627/1, 629, 631, 637, 647, 378, 380, 382, 384, 386, 388, 390, 394, 402, 404, 406, 408, 420, 426, 426/1, 428, 430, 432, 434, 434/1, 436, 438, 440, 448, 450, 452, 456, 470, 472, 474, 476, 482, 482/1, 484, 486, 488, 490, 492, 496, 500, 502, 504, 508, 512, 514, 516, 518, 520, 522, 524, 526, 528, 530, 534, 536, 552, 556.

3-451—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898.

---

## இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச் சட்டம்

(272 ம் அத்தியாயமான) இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் தக்க அதிகாரத் தாபனத்தால், அதாவது தங்கொட்டுவைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அப்பிரிவால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் உறுதிப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்த்தண,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1.3.1970.

### ஒழுங்குவிதிகள்

1. எவரேனும் எக்கொல்களத்திலாயினும் எம்மிருகத்தையும்—

(அ) அம்மிருகம் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரால் பரிசோதிக்கப்பட்டு, மனிதர் உண்பதற்காக கொல்லுதற்குத் தகுதியானதென அவரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி,

அல்லது

(ஆ) இவ்வொழுங்கு விதியின் (அ) பந்தியின் கீழ் அம்மிருகம் அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து 24 மணித்தியாலங்கள் கழிந்த பின்னர் எச்சமயத்திலும்,

அல்லது

(இ) எத்தினத்திலேயும் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்குமிடையேயன்றி கொல்லலாகாது. ஆயின், தலைவர், அவர் புறநடையானதெனக் கருதும் சந்தர்ப்பங்களில் இதில் சொல்லப்படுவதல்லாது வேறு எச்சமயத்திலேனும் எம்மிருகத்தையும் கொல்ல அதிகாரம் அளிக்கலாம்.

2. 1 ம் ஒழுங்குவிதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கொல்களவளவிலிருந்து உயிருடன் அப்புறப்படுத்தப்பட்டுள்ள மிருகம் எதையும் அது மறுபடியும் அந்தப் பிரமாணத்தின்கீழ் பரிசோதிக்கப்பட்டு மனிதர் உண்பதற்காக கொல்லுதற்குத் தகுதியானதென அங்கீகரிக்கப்பட்டாலன்றி கொல்களம் எதிலும், எவரேனும் கொல்லலாகாது.

3. (1) எம்மிருகமும் 1 ம் ஒழுங்குவிதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நோயுற்றதாக அல்லது மனிதர் உண்பதற்காகக் கொல்லப்படுதற்குத் தகுதியற்றதாகக் காணப்படின் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் அதனைக் கொல்லுவதைத் தடுக்கலாம்.

(2) இந்த ஒழுங்குவிதியின் கீழ் கொல்லப்படுவது தடுக்கப்பட்ட எம்மிருகத்தையும் எவரும் கொல்லலாகாது.

4. ஒரு கொல்கள வளவுக்குள் எம்மிருகத்தையும் கொண்டுவரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் அவ்வளவில் தங்கியிருக்கும்போது அதற்குப் போதிய உணவும் தண்ணீரும் கிடைக்கச் செய்வதற்கு அவசியமான எல்லாக் காரியங்களையும் செய்தல் வேண்டும்.

5. ஒரு கொல்கள வளவுக்குள் எம்மிருகத்தையும் கொண்டுவரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் கொல்லப்படுதற்குத் தகுதியற்றதென நிராகரிக்கப்பட்டால் உடனே அம்மிருகத்தை அவ்வளவிலிருந்து அப்புறப்படுத்த அல்லது அப்புறப்படுத்துவிக்க வேண்டும்.

6. கொல்களம் எதிலும் கொல்லப்பட்ட எம்மிருகத்தினதும் சடலம் அல்லது கழிவு இறைச்சி நோயுள்ளதென அல்லது மனிதர் உண்பதற்குத் தகுதியற்றதென சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் அபிப்பிராயப்படுவாராயின் அவர், உடனே அந்தச் சடலம் அல்லது கழிவு இறைச்சி விற்பதற்கு வைக்கப்படாமல் அல்லது மனிதர் உண்பதற்கு உபயோகிக்கப்படாமல் தடுத்தற்கேதுவாக அச்சடலத்தை அல்லது கழிவு இறைச்சியை அழிக்கவேனும் ஒழிக்கவேனும் செய்தல் வேண்டும். சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரின் ஏவலின் பேரிலன்றி எவரும் அத்தகைய சடலத்தை அல்லது கழிவு இறைச்சியை கொல்களத்திலிருந்து அப்புறப்படுத்தலாகாது.

7. கொல்களக் காப்பாளர், மனிதர் உண்பதற்காகக் கொல்லப்படுதற்குத் தகுதியானதென அங்கீகரிக்கப்பட்டிராத அல்லது 3 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் கொல்லப்படுவது தடுக்கப்பட்டுள்ள எம்மிருகத்தையும் அங்கு கொல்லுவதற்கு அனுமதிக்கலாகாது.

8. மனிதர் உண்பதற்கான எம்மிருகத்தினதும் சடலத்தையும், அச்சடலத்தின் முன் தொடைகளிலும் பின்தொடைகளிலும் கொல்களக் காப்பாளரால் " T. C. D " என்னும் எழுத்துக்கள் இடப்பட்டிருந்தாலன்றி கொல்களத்திலிருந்து எவரும் அப்புறப்படுத்தலாகாது.

9. எம்மிருகமும் வேறு எம்மிருகத்தினதும் முன்னிலையிலேனும் அவ்வளவில் முன்னர் கொல்லப்பட்ட ஒவ்வொரு மிருகத்தினதும் சடலம் அப்புறப்படுத்தப்பட்டு அல்லது மறைக்கப்பட்டு அவ்வளவு சுத்தம் செய்யப்படும்வரையிலேனும் கொல்லப்படல் ஆகாது.

10. கொல்களம் எதற்கும் பொறுப்பாளியாயிருப்பவர், தொற்று நோய், ஒட்டு நோய் அல்லது சருமநோய் எதனாலும் வருந்தும் அல்லது சமீபகாலத்தில் வருந்திய அல்லது அத்தகைய நோயினால் வருந்தும் எவருக்கும் சமீபகாலத்தில் பணிவிடை செய்த எவரையும் காத்தற்கால எல்லை கழியும்வரை அக்கொல்களத்துக்குள் பிரவேசிக்கவேனும் எம்மிருகத்தையும் கொல்லுவதில் பங்குகொள்ளவேனும் அனுமதிக்கலாகாது.

11. நியாயமான எல்லா வேளைகளிலும் எந்தக் கொல்களத்துக்கும் செல்வதும் அதனைப் பரிசோதிப்பதும் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தருக்கு சட்டமுறையாகும். அதற்குப் பொறுப்பாளியாயிருப்பவர் அன்னாருக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்தல் வேண்டும்.

12. சபையால் தாபிக்கப்பட்ட கொல்களம் எதையும் உபயோகிப்பதற்கு கீழ்க்காணும் வீதப்படியான ஒரு கட்டணம் சபையிடம் முதலில் செலுத்தப்படவேண்டும். அக்கட்டணம் செலுத்தப்பட்டமைக்குச் சான்றான அலுவலகப் பற்றுச்சீட்டு ஒன்றின்றி எம்மிருகத்தையும் கொல்லலாகாது :

| | ரூ. | ச. |
|---|---|---|
| மாடுகளுக்கு தலைக்கு .. .. .. | 1 | 0 |
| செம்மறியாடுகளுக்கு அல்லது வெள்ளாடுகளுக்கு தலைக்கு .. | 0 | 50 |

13. கொல்களக் காப்பாளர் ஒவ்வொருவரும் சபை பணிக்கின்ற விதத்தில் கொல்களத்தில் கொல்லப்படும் மிருகம் ஒவ்வொன்றையும் பற்றிய விபரங்களின் பதிவேடு ஒன்றை வைத்திருக்கவேண்டும்.

14. இந்த ஒழுங்குவிதிகளால் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தருக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள், சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரின் பொதுவான அல்லது சிறப்பான ஏவலின்படி செயலாற்றும் உத்தியோகத்தர் எவராலும் பிரயோகிக்கப்படலாம்.

15. இந்த ஒழுங்கு விதிகளில்—
" தலைவர் " என்பது சபைத் தலைவர் எனப் பொருள்படும்.
" சபை " என்பது தங்கொட்டுவைப் பட்டின சபை எனப்பொருள்படும்.

3-462—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

## மொனருகலைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

### 1970 ஆம் ஆண்டுக்கான விசேட தண்ணீர் வரி

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129(ஆ) என்னும் பிரிவின் கீழும், அப்பிரிவினால் அன்னாருக்குரித்தாக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் வழங்கிய அங்கீகாரத்துடனும், துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியனவான வரையறைகள், விலக்குகள் ஆகியவற்றுக்கமைவாகவும், தண்ணீர் சேவையினால் பயனடைவதும், இதனகத்துள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளதுமான பிரதேசத்திலுள்ளடங்கிய நிலையான ஆதனங்கள் சகலவற்றினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஆறு வீதமானதும் முறையே மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசம்பர் 31 ஆகிய திகதிகளில் சமமான நான்கு தவணைகளில் கட்டப்படவேண்டியதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை 1970 ம் ஆண்டுக்கு மொனருகலைப் பட்டின சபை விதித்திருக்கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 4.3.1970.

#### அட்டவணை

பின்வரும் மனையகங்களை உள்ளடக்கிய பிரதேசம்—

#### 1 ம் வட்டாரம்

குமாரபோல் தெரு இல. 1, 3, 5, 7, 7எ, 9, 11, 11எ, 11/1, 13, 15, 17, 21, 21/1, 23, 23/1, 23/2, 23/3, 23/4, 23/5, 27, 29, 31/1, 33எ, 35, 37, 39, 41, 45, 45எ, 47, 49, 51, 53, 55, 55எ, 57, 57/1, 59, 61, 63, 65, 67, 67எ, 69, 71, 75, 77, 81, 81எ, 81/1, 81/2.

பொத்துவில் தெரு இல. 8, 8/1, 10, 16, 18, 20, 22, 26, 30, 32, 40, 42, 44, 44/1.

#### 2 ம் வட்டாரம்

குமாரபோத் தெரு இல. 2, 4, 6, 14, 18, 20, 22, 24, 24/1, 24/2, 26, 28, 30, 34, 36, 38, 44, 46, 48, 50, 52, 54, 56, 58, 62, 64, 66இ, 70, 72, 74, 74/1, 76, 78, 82, 84, 88, 88எ, 84/1, 84/2, 92, 94, 96, 98, 104, 108, 110, 110/1, 112, 112/1, 112/2, 112/3.

வெடிக்கும்புரத் தெரு இல. 5, 15, 25, 27, 29, 31, 31எ, 33, 35, 37.
வெல்லவாயாத் தெரு இல. 1, 9, 15, 19, 21, 25, 27, 29, 33, 35, 39, 41, 43, 45, 47, 49.

#### 3 ம் வட்டாரம்

துட்டகைமனுத் தெரு இல. 7, 15, 19, 21, 23, 27, 29, 31, 10, 16, 20, 20/1, 22, 30, 32, 34.

வெடிக்கும்புரத் தெரு இல. 2, 8, 14, 16, 20, 22, 24, 24/1, 26, 28, 30, 34, 36, 38, 38/1, 40, 42, 44/1, 48.

வெல்லவாயாத் தெரு இல. 65, 73, 75, 79, 107, 113, 115, 115/1, 115/2, 115/3, 115/4, 117/1, 117/4, 119, 125, 125/1, 125எ, 125பி, 125சி, 125/15, 125/16, 125/17, 125/18, 125/19, 125/20, 125/21, 125/22, 125/23, 125/24, 125/26, 125/27, 125/28, 125/29, 125/30, 131/1, 131/2, 131/3, 131/10, 131/11, 131/12, 131/13, 131/14, 131/15, 131/16, 131/17, 131/18, 131/19, 131/20, 131/21, 147, 149, 151, 153, 155, 157, 159, 125/25.

#### 4 ம் வட்டாரம்

வெல்லவாய தெரு இல. 190, 198, 198/1, 200, 204, 218, 220, 222, 224, 270, 274, 274/1, 278, 282, 286, 290, 290/1, 300, 304, 310, 320, 322, 328.

பைபிள் வீதி இல. 1, 5, 6, 8, 10, 12, 14, 18, 20, 20/1, 7.
கச்சேரி வீதி இல. 4, 8.

#### 5 ம் வட்டாரம்

மகாநாம தெரு இல. 15, 17, 21, 21/1, 25, 25/2, 41, 35.

வெல்லவாயாத் தெரு இல. 46, 48, 48/1, 48/2, 48/3, 50, 52, 54, 62, 40, 40/1, 40/7, 40/10, 44, 60, 66, 70, 72, 74, 76, 80, 82, 84, 86, 86/1, 88, 90, 92, 96, 104, 110, 114, 120, 124, 126, 128, 134, 136, 138, 140, 162, 166, 168, 170, 174, 174/1, 176, 178.

#### 6 ம் வட்டாரம்

மகாநாம தெரு இல. 2, 2/1, 10, 20, 26.

பொத்துவில் தெரு இல. 1, 3, 5, 11, 17, 19, 21, 23, 23/1, 33, 33/1, 41.

வெல்லவாயாத் தெரு இல. 2, 4, 4எ, 10, 12, 16, 24, 30, 32, 34, 36, 36/1, 38.

3–449—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச் சட்டம்

(272 ம் அத்தியாயமான) இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் தக்க அதிகாரத் தாபனத்தால், அதாவது கண்டி மாவட்டத்து ஹரிஸ்பற்று உடகம்பஹ கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு, அப்பிரிவால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் உறுதிப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு,

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 1 ந் உ.

### ஒழுங்குவிதிகள்

1. எவரேனும் எக்கொல்களத்திலாயினும் எம்மிருகத்தையும்—

(அ) அம்மிருகம் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரால் பரிசோதிக்கப்பட்டு, மனிதர் உண்பதற்காக கொல்லுதற்குத் தகுதியானதென அவரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி,

அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதியின் (அ) பந்தியின் கீழ் அம்மிருகம் அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து 24 மணித்தியாலங்கள் கழிந்த பின்னர் எச்சமயத்திலும்,

அல்லது

(இ) எத்தினத்திலேயும் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்குமிடையேயன்றி கொல்லலாகாது. ஆயின், தலைவர், அவர் புறநடையானதெனக் கருதும் சந்தர்ப்பங்களில் இதில் சொல்லப்படுவதல்லாது வேறு எச்சமயத்திலேனும் எம்மிருகத்தையும் கொல்ல அதிகாரம் அளிக்கலாம்.

2. 1 ம் ஒழுங்குவிதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கொல்களவிலிருந்து உயிருடன் அப்புறப்படுத்தப்பட்டுள்ள மிருகம் எதையும் அது மறுபடியும் அந்தப் பிரமாணத்தின்கீழ் பரிசோதிக்கப்பட்டு மனிதர் உண்பதற்காக கொல்லுதற்குத் தகுதியானதென அங்கீகரிக்கப்பட்டாலன்றி கொல்களம் எதிலும், எவரேனும் கொல்லலாகாது.

3. (1) எம்மிருகமும் 1 ம் ஒழுங்குவிதியின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நோயுற்றதாக அல்லது மனிதர் உண்பதற்காகக் கொல்லப்படுதற்குத் தகுதியற்றதாகக் காணப்படின் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் அதனைக் கொல்லுவதைத் தடுக்கலாம்.

(2) இந்த ஒழுங்குவிதியின் கீழ் கொல்லப்படுவது தடுக்கப்பட்ட எம்மிருகத்தையும் எவரும் கொல்லலாகாது.

4. ஒரு கொல்கள வளவுக்குள் எம்மிருகத்தையும் கொண்டுவரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் அவ்வளவில் தங்கியிருக்கும்போது அதற்குப் போதிய உணவும் தண்ணீரும் கிடைக்கச் செய்வதற்கு அவசியமான எல்லாக் காரியங்களையும் செய்தல் வேண்டும்.

5. ஒரு கொல்கள வளவுக்குள் எம்மிருகத்தையும் கொண்டுவரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் கொல்லப்படுதற்குத் தகுதியற்றதென நிராகரிக்கப்பட்டால் உடனே அம்மிருகத்தை அவ்வளவிலிருந்து அப்புறப்படுத்த அல்லது அப்புறப்படுத்துவிக்கவேண்டும்.

6. கொல்களம் எதிலும் கொல்லப்பட்ட எம்மிருகத்தினதும் சடலம் அல்லது கழிவு இறைச்சி நோயுள்ளதென அல்லது மனிதர் உண்பதற்குத் தகுதியற்றதென சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் அபிப்பிராயப்படுவாராயின் அவர், உடனே அந்தச் சடலம் அல்லது கழிவு இறைச்சி விற்பதற்கு வைக்கப்படாமல் அல்லது மனிதர் உண்பதற்கு உபயோகிக்கப்படாமல் தடுத்தற்கேதுவாக அச்சடலத்தை அல்லது கழிவு இறைச்சியை அழிக்கவேனும் ஒழிக்கவேனும் செய்தல் வேண்டும். சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரின் ஏவலின் பேரிலன்றி எவரும் அத்தகைய சடலத்தை அல்லது கழிவு இறைச்சியை கொல்களத்திலிருந்து அப்புறப்படுத்தலாகாது.

7. கொல்களக் காப்பாளர், மனிதர் உண்பதற்காகக் கொல்லப்படுதற்குத் தகுதியானதென அங்கீகரிக்கப்பட்டிராத அல்லது 3 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் கொல்லப்படுவது தடுக்கப்பட்டுள்ள எம்மிருகத்தையும் அங்கு கொல்லுவதற்கு அனுமதிக்கலாகாது.

8. மனிதர் உண்பதற்கான எம்மிருகத்தினதும் சடலத்தையும், அச்சடலத்தின் முன் தொடைகளிலும் பின்தொடைகளிலும் கொல்களக் காப்பாளரால் "V. C. U. H. P." என்னும் எழுத்துக்களும் காரியத்திற்கேற்ப "நாட்டு மாட்டிறைச்சி" "ஆட்டிறைச்சி (வெள்ளாடு)", "பன்றியிறைச்சி" என்னும் அடையாளங்களில் ஒன்றும் இடப்பட்டிருந்தாலன்றி கொல்களத்திலிருந்து எவரும் அப்புறப்படுத்தலாகாது.

9. எம்மிருகமும் வேறு எம்மிருகத்தினதும் முன்னிலையிலேனும் அவ்வளவில் முன்னர் கொல்லப்பட்ட ஒவ்வொரு மிருகத்தினதும் சடலம் அப்புறப்படுத்தப்பட்டு அல்லது மறைக்கப்பட்டு அவ்வளவு சுத்தம் செய்யப் படும்வரையிலேனும் கொல்லப்படல் ஆகாது.

10. கொல்களம் எதற்கும் பொறுப்பாளியாயிருப்பவர், தொற்று நோய் ஒட்டு நோய் அல்லது சருமநோய் எதனாலும் வருந்தும் அல்லது சமீபகாலத்தில் வருந்திய அல்லது அத்தகைய நோயினால் வருந்தும் எவருக்கும் சமீபகாலத்தில் பணிவிடை செய்த எவரையும் நோய் தொற்றும் கால எல்லையும் காத்தற்கால எல்லையும் கழியும்வரை அக்கொல்களத்துக்குள் பிரவேசிக்கவேனும் எம்மிருகத்தையும் கொல்லு வதில் பங்குகொள்ளவேனும் அனுமதிக்கலாகாது.

11. நியாயமான எல்லா வேளைகளிலும் எந்தக் கொல்களத்துக்கும் செல்வதும் அதனைப் பரிசோதிப்பதும் சௌக்கிய வைத்திய உத்தியோ கத்தருக்கு சட்டமுறையாகும். அதற்குப் பொறுப்பாளியாயிருப்பவர் அன்னாருக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்தல் வேண்டும்.

12. சபையால் தாபிக்கப்பட்ட கொல்களம் எதையும் உபயோகிப்ப தற்கு கீழ்க்காணும் வீதப்படியான ஒரு கட்டணம் சபையிடம் முதலில் செலுத்தப்படவேண்டும். அக்கட்டணம் செலுத்தப்பட்டமைக்குச் சான்றான அலுவலகப் பற்றுச்சீட்டு ஒன்றினறி எம்மிருகத்தையும் கொல்லலாகாது.

| | ரூ. ச. |
|---|---|
| மாடுகளுக்கு தலைக்கு .. .. | 1 00 |
| செம்மறியாடுகளுக்கு அல்லது வெள்ளாடுகளுக்கு தலைக்கு .. .. .. | ·50 |

13. கொல்களக் காப்பாளர் ஒவ்வொருவரும் சபை பணிக்கின்ற விதத்தில் கொல்களத்தில் கொல்லப்படும் மிருகம் ஒவ்வொன்றையும் பற்றிய விபரங்களின் பதிவேடு ஒன்றை வைத்திருக்கவேண்டும்.

14. இந்த ஒழுங்குவிதிகளால் சௌக்கிய வைத்திய உத்தியோகத்த ருக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள், சௌக்கிய வைத்திய உத்தி யோகத்தரின் பொதுவான அல்லது சிறப்பான ஏவலின்படி செயலாற்றும் உத்தியோகத்தர் எவராலும் பிரயோகிக்கப்படலாம்.

15. இந்த ஒழுங்கு விதிகளில்—

“ தலைவர் ” என்பது சபைத் தலைவர் எனப் பொருள்படும் ;

“ சபை ” என்பது கண்டி மாவட்டத்து ஹரிஸ்பற்று உடகம்பஹ கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை எனப் பொருள்படும்.

3—465—20.3.1970 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## மட்டக்களப்பு மாநகர சபை

### மட்டக்களப்பு நீருதவு கருமங்கள் கட்டளைச் சட்டம்

மட்டக்களப்புப் பட்டினத்தின் எல்லைகளுக்குள்ளிருக்கும் வீடுகள், கட்டடங் கள், காணிகள், கூலிமனைகள் ஆகிய சகலவற்றினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஆறு வீதமான ஒரு தண்ணீர் வரியை 1970 ம் ஆண்டுக்கு மட்டக்களப்பு மாநகர சபை (209 ம் அதிகாரமாம்) மட்டக்களப்பு நீருதவுக் கட்டளைச் சட்டத்தின் 4 (1) ம் பிரிவின் கீழ் விதித்திருக்கின்றதென்றும் அவ்வரி முறையே மார்ச் 31, ஜூன் 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய திகதிகளன்று அல்லது அதற்கு முன்பு நான்கு தவணைகளில் சம தொகைகளாகச் செலுத்தப்படல் வேண்டுமென்றும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 4 ந உ.

3—450—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

HC 1/2/32 LGD/HC/1/2/32

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமாம்) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 47 ம் பிரிவின் (2) ம் உட்பிரிவிற்கமைவாக உள்ளூராட்சி அமைச்சரால் இடப் பட்ட கட்டளை.

கொழும்பு, ஆர். ஜேமதுஸ,
1970 ம் ஆண்டு பெப்ரவரி மீ 18 ந உ. உள்ளூராட்சி அமைச்சர்.

### கட்டளை

கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 47 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவு பதுளை மாவட்டத்திலுள்ள கந்தப்பள்ளை இல. 1 கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்குப் பொருந்தாது எனப் பிரசித்தப்படுத்தி 1966 நவெம்பர் 28 ன் 14,723/2 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை இத்தால் வழக்கழிக்கப்படுகிறது.

3-473—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

LGD/HA/5/1/14/11

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

### கட்டளை

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின 47 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவபலங்களை அனு சரித்து உள்ளூராட்சி அமைச்சர், ரணசிங்க பிரேமதாச ஆகிய நான் சொல்லப்பட்ட பிரிவின் (1) ஆம் உட்பிரிவு, யாழ்ப்பாண மாவட்டத்தி லுள்ள கொக்குவில் கிராமப் பிரதேசத்து கிராமச் சபைக்கு ஏற்புடையதாகாது என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

ஆர். ஜேமதுஸ,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 1
1970 ம் ஆண்டு பெப்ரவரி மீ 18 ந உ.

3-474—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## தங்காலை நகர சபை

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

### 1970 க் கான விசேட தண்ணீர் வரி

(255ஆம் அத்தியாயமாம்) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 130 (ஆ) என் னும் பிரிவினபடியும், அப்பிரிவினால் அன்னாருக்கு அளிக்கப்பட்ட தத்துவ பலங்களைக்கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் வழங்கிய அனுமதியுடனும், துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியனவாய வரம்புகளுக்கும் விதி விலக்குகளுக்கும் அமைவாகவும் தங்காலைக் பட்டினத்தினுள் அமைந் துள்ள நிலையான ஆதனங்கள் சகலவற்றினதும் வருடாந்தபெறுமதியின் நூற்றுக்கு ஆறு வீதமானதும் முறையே மார்ச் 31, ஜூன் 30, செத் தெம்பர் 30, திசம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சம தொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர்வரியை 1970 ஆம் ஆண்டுக்குத் தங்காலை நகர சபை விதித்திருக்கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஈ.ஜி. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 1 ந உ.

3-475—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## குளியாப்பிட்டி நகர சபை

### நகர சபைகள் கட்டளைச் சட்டம் 1970 க் கான விசேட தண்ணீர் வரி

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 130 (ஆ) ஆம் பிரிவின் படியும், அப்பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவபலங் களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் வழங்கிய அனுமதியுடனும், துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியனவாய வரம்புகளுக்கும் விலக்கு களுக்கும், அமைவாகவும் குளியாப்பிட்டி பட்டினத்தினுள் அமைந் துள்ள (நெற்காணிகள், தரிசுநிலங்கள் தவிரவுள்ள) நிலையான ஆதனங் கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஆறு வீத மானதும், முறையே மார்ச்சு 31, ஜூன் 30, செத்தெம்பர் 30, திசம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத் தப்படற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை 1970 ஆம் ஆண்டுக்கு குளியாப்பிட்டி நகர சபை விதித்திருக்கின்றதென இத்தால் அறிவிக்கப் படுகிறது.

ஈ.ஜி. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 1 ந உ.

3-476—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

# பதவிகள் — வெற்றிடம்

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

1. **படிகள்.**—வேறுவிதம் சொல்லப்பட்டாலன்றி வீட்டு வாடகைப்படி தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிக விசேட வாழ்க் கைப்படி ஆகியவை அரசாங்க விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கக் கொடுக்கப்பட்டுள்ளன.

2. **சேவை நிபந்தனைகள்.**—உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின் (அதிகாரம் 264) ஏற்பாடுகளுக்கும், அவற்றினது திருத்தங்கள் எதனிற் கும், அவற்றின்கீழ் இயற்றப்பட்ட பிரமாணங்களுக்கும், காலத்துக்குக் காலம் அதிகாரசபையினால் விதந்துரைக்கப்படும் மற்றைய சேவை நிபந் தனைகளுக்கும் உட்பட்டதாய் நியமனங்கள் அமையும்.

3. **வேலைக்கமர்த்துவதற்கான நியதிகள்.**—1952 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 8 ஆம் திகதி வெளியான 10,432 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் IV ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்ட பதவிகளும் அவற் றோடு காலத்துக்குக் காலம் சேர்க்கப்படும் பதவிகளும் உள்ளூராட்சிச் சேவையில் பெண்களல்லாதாரால் வகிக்கப்படும் பொழுது 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை இளைப்பாற்றிச் சம்பளத் திட்டப் பிர மாணங்களின்கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரியனவாகும்.

(அ) அரசாங்கத்தின் கீழ் சேவை செய்யும் உத்தியோகத்தர்கள் இளைப் பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 ஆம் பிரிவின்கீழ் விடுதலை செய்யப்பட்டு உள்ளூராட்சிச் சேவையின் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு மாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாத்துக் கொடுக்கப்படும்.

(ஆ) உள்ளூராட்சித் தாபனங்களின், அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப் பாறும்போதும் கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1949 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைத் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டுள்ளவாறுள்ள 1945 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவுக்கிணங்க உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர் முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தார்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(இ) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படும் பெண்களல்லாத ஏனையோர் யாவரும், 55 வயதுக்கு மேற்பட்ட உத்தி யோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படும் திகதிக்கு நேர்முந்திய திகதியில் அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்துக் குரிய பதவிகளில் இருந்தவர்களும் 1952 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி வெளியான 10,329 ஆம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப் பிரமாணங்களின்படி தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குத் தங்கள் சம்பளத்தில் 4 சத விகிதத்தைச் செலுத்தவேண்டும். குறித்த உள்ளூ ராட்சித் தாபனம் உத்தியோகத்தரின் சம்பளத்தில் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஈ) நியமிக்கப்படுபவர்கள், குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ண யிக்கும் தொகைக்கு உரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறி கொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப் படலாம்.

(உ) உள்ளூராட்சிச் சேவையின், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள், இலங்கையின் எப் பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைய விடயமாக முறையான தகைமைபெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(ஊ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம், பொதுவாக மூன் றாண்டு காலத்துக்குத் தகுதிகாண் நிலையில் அல்லது அதற்கப்பால் உறுதிப்படுத்தப்படுவதற்கு உட்பட்டதாக அமையும்.

(எ) விண்ணப்பிப்பவர்கள் தங்கள் வயதுக்கத்தாட்சியாக தமது பிறப் புப் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பங்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். சத்தியக் கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பிறப்புப் பதிவுச் சான்றிதழ்ப் பிரதிகள் சேர்த்து அனுப்பப்படாவிட்டால் விண்ணப்பிப்பவர்கள் அருகதையற்றவர்களாகக் கருதப்படுவர்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) எப்பதவிக்கேனும் நீடிய காலம் விதிக்கப்பட்டாலன்றி, காரியத்துக்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளில், இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்" களின் தகுதி காண் நிலைப் பரீட்சார்த்த காலம் இரண்டு ஆண்டுகளாயிருக்கும்.

(ii) "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்தற்கும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச் சட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்துதற்குமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகள் எதற்கும் அமைந்தொழுகுமாறு வேண்டப்படுவர்.

(iii) (அ) இந்த உத்தியோகத்தர்கள் அவர்களின் தகுதிகாண் நிலை பரீட்சார்த்த காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறுமாறு வேண்டப் படுவர்.

(ஆ) தகுதிகாண் நிலை பரீட்சார்த்த காலமுடிவில் அவர்களின் நிய மனம் உறுதிப்படுத்துகின்றமை, பிறவற்றோடு, குறிப்பிட்ட காலவரை யறைக்குள் சிங்களத்தில் தேர்ச்சிகாண் பரீட்சையில் சித்தியெய்து வதைப் பொறுத்தாயிருக்கும். குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்த தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியடையத்தவறினால் வேதனப் பெருக்கு இடைநிறுத்தப்படும். குறிப்பிட்ட காலவரையறையையும் கடந்த நீடித்த காலவரையறையுள் சித்தியடையத் தவறினால், வேதனப் பெருக்கின் இடைநிறுத்தம் பூரணமாகவே நிறுத்தப்பட்டதாகிவிடும். பரீட்சை சித்தியடையும் காலம்வரை இப்பூரண நிறுத்துகை செயற்படும். (13,387 இலக்கத்தையும், 9.11.62 தேதியையும் கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை உத்தியோக கரும மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமான நிபந்தனைகளைப் பார்க்கவும்).

### (இ) கல்வியும் ஏனைய தகைமைகளும்

சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக்குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லா சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற சிங்களப் பரீட்சார்த்தி சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது சமமான பரீட்சையில், சிங்கள மொழியில் அல்லது அதற்குச் சமமானதில், சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ந் தேதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களும், உள்ளூ ராட்சிச் சேவையில் உள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெற விரும்பு பவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

### (ஈ) வினைத்திறமைகாண் தடைகள்

புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் தமது பதவியில் உறுதிப் படுத்தப்பட்ட திகதியிலிருந்து 2 வருடங்களுக்கு, சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தில், சிங்கள மொழியில் விதிக்கப்பட்ட வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடையவேண்டியிருக்கும். சித்தியடையத் தவறினால் உத்தியோகத்தரின் வேதனப் பெருக்கம் முதல் இடை நிறுத்தப்படும். இரண்டாவதாக நிறுத்தப்படும், அதன்பின் பின் போடப்படும்.

(iv) சிங்கள மொழிமூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமை பெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் சிங்களத்தில் நடக்கும் தேர்ச்சிகாண் பரீட்சையிலிருந்து தவிர்த்துவிடப்படுவர்.

(v) தகுதிகாண் நிலைப் பரீட்சார்த்த கால முடிவில, சிங்களத்தில் விதித்த தேர்ச்சிகாண் தரத்தை எய்தமுடியாவிட்டால், உள்ளூராட்சி சேவை நிபந்தனைகள் 21 னதும் 22 னதும் ஏற்பாடுகள் பொருத்தமாகும்.

"(மேற்சொன்ன (iii) (அ), (ஆ) (iv) ஆகியவை, தமிழ்/ஆங்கில மொழிமூலம் சேர்க்கப்பட்டவர்களுக்கே பொருத்தமாகும்)."

குறிப்பு.—(1) இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது 1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூ ராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் எனப் பொருள்படுகின்றது.

(2) மேற்கண்ட பந்தி 4 (3) (அ) (ஆ) (ஈ) இல் உள்ள ஏற்பாடுகள் அரசாங்கத் திணைக்களங்களில் சேவிக்கும் "பழைய சேர்வு உத்தி யோகத்தர்களும் உள்ளூராட்சிச் சேவையில் நியமனங்களை ஏற்றுக் கொள்வதற்குத் தமது பதவிகளில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களுமான உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தா."

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதையும் திருப்திகரமாக நிரூபிக்கவேண்டும். உள்ளூராட்சிச் சேவைக்கு ஆட்சேர்த்தல் பற்றிய சகல தேவைகட்கும் "இலங்கையர்" என்னும் பதத்திற்கு வம்சாவழியில் அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையாகவுள்ளவர் என்று வரைவிலக்கணம் கூறப் படுகிறது.

**6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னுள் வீரர்களுக்கான சலுகை**

(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில், தமது வயதுகளிலிருந்து, கிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவைசெய்த முன்னுள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத்திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக்குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக்குறைவான பரீட்சையைத் தமது மிகக்குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படை வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

**7. வயதுச் சலுகை.**—இருவருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தர பதவிகள் வகிக்கும் உள்ளூராட்சிமன்ற ஊழியர்கள், உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும் பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

**8. வேண்டற்பால ஏனையவை.**—(i) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகர சங்க அதிகாரி அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள், அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில் விண்ணப்பக்காரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா இல்லையா என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும் போது குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன்பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டா.

(iv) அபேட்சகர் ஒருவரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச் சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தேர்ந்தெடுப்பதற்கு எவ்விதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(v) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும். தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

(vi) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகல வகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(vii) " கீழே இணைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரியிடப்படவேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக் கூடாது."

(viii) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணமற்போய்விட்டதோ அல்லது, தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே வினைவைத் தேடிக்கொள்கின்றனர்.

**வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய**

**விண்ணப்ப மாதிரிப் பத்திரம்**

**உள்ளூராட்சிச் சேவை**

**முக்கியமாகக் கவனிக்க.**—(i) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை, தபாற் பெட்டி 530, கொழும்பு 1 என்ற விலாசத்தை அடையும்வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(ii) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களைச் சித்தஞ்செய்யுமுன்னர் மேற்போந்த பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பகாரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி உரிய சகல தகவல்களையும் தவறுது கொடுக்க வேண்டும்.

(iii) விண்ணப்பகாரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும் :—(1) பிறப்புச் சான்றிதழ் (2) ஆங்கிலத்தில்–சிங்களத்தில்–தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (3) குணச் சான்றிதழ், (4) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்–தொழில்நுட்ப தகைமைகளின் சான்றிதழ்.

(iv) விண்ணப்பகாரர்கள் மேற்போந்த பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

.....................................பதவிக்கான விண்ணப்பம்

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி :————.
   (ஆ) ..............................பதவிக்கான விண்ணப்பம்
   முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :————.

2. தேசிய இனம் :————.
   (மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா இலங்கையரல்லாதாரா என்பதைக் கூறுக. நீர் பதிவுமூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக)

3. தபால் விலாசம் :————.
   (விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்).

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியில் சரியான வயது :————.
   .....வருடங்கள் ......மாதங்கள் ........நாட்கள்
   (ஆ) பிறந்த திகதி :————.

5. பிறந்த இடம் :————.
   (அ) விண்ணப்பக்காரர் :————.
   (ஆ) அவரது பிதா :————.
   (இ) அவரது பிதாவழிப்பேரன் :————.
   (ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் :————.

   (விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா, தனியாளரா, தாரமிழந்தவரா அல்லது கைம்பெண்ணு :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :————.

| பொதுக் கல்வி | | | உயர் தொழிற்–தொழில்நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1.................... | .......... | .......... | 1.................... | .......... | .......... |
| 2.................... | .......... | .......... | 2.................... | .......... | .......... |
| 3.................... | .......... | .......... | 3.................... | .......... | .......... |
| 4.................... | .......... | .......... | 4.................... | .......... | .......... |
| 5.................... | .......... | .......... | 5.................... | .......... | .......... |

8. கல்வித் தகைமைகளும் திகதியுடன் கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையும் :—————.

(அ) சிங்களம் :—————.

(ஆ) ஆங்கிலம் :—————.

(இ) தமிழ் :—————.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங் களின் பெயர்களுடனும் தருக :—————.

10. கல்வி பயின்ற பாடசாலையும் அதைவிட்ட திகதியும் :—————

11. பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவி களை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) :—————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்தி லாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின் சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன். விபரமாக விளக்குக :—————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) :—————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—————.

(i) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :—————.

(ii) தற்போதைய சம்பளமும்(படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் :—————.

(iii) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா ? :—————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப்பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதி களும் :—————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும், பேச்சை மொழி பெயர்க்கும் தேர்ச்சியுண்டா ?

(அ) சிங்களம் :—————.

(ஆ) தமிழ் :—————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இவை இரண்டும் உமக்குண்டா? உண்டெனில் அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக) :—

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா? உண்டெனில் அவ்வழக்கின் திகதியையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக :—————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா? இல்லையாயின் எவ்வள வுக்கு கடனாளியாக இருக்கின்றீர் :—————.

16. வேறு ஏதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) :—————.

17. யார் யாரிடமிருந்து குணச்சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதி களையே இணைத்தல்வேண்டும்). அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டு தலை நிறைவேற்ற வேண்டியதில்லை :—————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவை யென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப் படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக்காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும் நியமனத்துக்குப் பின்னர் அச்செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

—————.

திகதி :—————. விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 530,
கொழும்பு 1.

---

## உள்ளூராட்சிச் சேவை

### பம்பிங் நிலையம்—சிகிச்சை வேலைகள் எந்திரவியல் உதவியாளர் பதவி கொழும்பு மாநகரசபை

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உ. ஆ. சே. அ. சபையினால் கோரப்படுகின்றன.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் பின்வருமாறு :— வருடாந்தம் ரூபா 7,800—9 × 360—3 × 480—ரூபா 12,480. மணமானவர் களுக்கு அரசாங்க உத்தியோகத்தருக்குரிய வீதங்கட்கும் நிபந்தனைகட்கு மிணங்க ஒரு திருமணப்படியும் கொடுக்கப்படும்.

3. **வேண்டிய தகைமைகள்.**—(1) வயது :— 17.4.1970 ல் 35 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

(2) (அ) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கனிஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் பயிற்சிநெறி (இயந்திரவியல்)யில் வெற்றி கரமாக நிறைவெய்தியிருத்தல் வேண்டும் அல்லது ஒரு நன்குமதிக்கப் பெற்ற ஸ்தாபனத்திலோ அல்லது சங்கத்திலோ இதற்குச் சமமான தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) அரசாங்கத்தின் அல்லது உள்ளூராட்சிச் சேவையின் கீழுள்ள ஒரு நன்கு மதிக்கப்பட்ட ஒரு ஸ்தாபனத்தில், இயந்திரங்களையும் உபகரணங்களையும் நிறுவுதலிலும் அவைகளைப் பராமரிப்பதிலும், சர்வீஸ் செய்வதிலும், முழுமையாகப் பிரித்துச் செம்மையிடுவதிலும் குறைந்தது 10 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். இதிற் குறைந்தது 6 வருடங்களாவது மேற்பார்வையிடும் தகைமையில் இருந்திருக்க வேண்டும்.

4. இவ்வர்த்தமானியின் IV ம் பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப் பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங் களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப் படுகின்றது.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் எழுதப்பட்டு, 17.4.70 ந் திகதிக்குப் பிந்தாமல் செயலாளருக்கு கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும்.

6. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங் கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ் வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன் னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித் திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம், விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

ஏ. பி. சமரஜீவா,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த. பெ. 530, கொழும்பு 1,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 9 ந் உ.

3–501—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

## உள்ளூராட்சிச் சேவை

### அத்தியட்சர் பதவி, மாநகர எந்திரியின் திணைக்களம்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய வேதனம் வருமாறு வருடாந்தம் ரூபா 6,600—180 × 240—ரூபா 9,240. வருடாந்தம் ரூபா 8,280 பெறு முன் வினைத்திறமைகாண் தடையுண்டு. திருமணமானவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குரிய வீதங்கட்கும் நிபந்தனைகட்குமிணங்க ஒரு திருமணப்படியும் வழங்கப்படும்.

3. **வேண்டிய தகைமைகள்.**—பின்வருபவர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) கொழும்பு மா. ந. சபையிலுள்ள சிரேட்ட பரிசோதகர்கள், தத்தமது தரங்களின், வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள ஏனைய உள்ளூராட்சி மன்றங்களில் உள்ள தரம் 1, தரம் 2, மராமத்து அத்தியட்சர்கள் (இதே அந்தஸ்துள்ள வேறு எவரும்).

(ஆ) 1955 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை வேதனங்கள் திட்டத்தை அனுசரிப்பதற்கு முன் (அதாவது 12.11.55 க்கு முன்) பரிசோதகர்களாக நியமிக்கப்பட்டவர்களும் பின்வருவன வற்றில் ஒன்றை உடைமையாகக் கொண்ட கொழும்பு மா. ந. ச. பரிசோதகர்கள் :—

(1) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் மாநகர எந்திரியியல் தேர்வுப் பத்திரம் அல்லது

(2) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் க. தொ. நு. உ. (சிவில்) அல்லது

(3) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கட்டட நிர்மாணத்தில் இறுதிச் சான்றிதழ் (3 வருட மாலை வகுப்பு) அல்லது

(4) சமமான மற்றைய தகைமை.

வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடையாத இவ்வகுதிக்குள் அடங்கும் உத்தியோகத்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால், நியமனத் திகதியிலிருந்து 2 வருடங்களுக்குள், பிரமாணங்கள், துணைச் சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள் போன்றவையுள்ள பரீட்சையில் சித்தியடையவேண்டும். சித்தியடையத் தவறினால் அவர்கள் தமது பழைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவார்கள்.

4. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் 4 வது பகுதியில் உள்ள, உள்ளூர் ஆட்சிச் சேவைப் பகுதிகளுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் கண்டவாறு விண்ணப்பங்களை நிரப்பி 17.4.70 திகதிக்குப் பிந்தாமல் உ. ஆ. சே. அ. ச. செயலாளருக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

6. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பிப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சிபார்ச் செய்து சான்றுரைத்தாலன்றி அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த. பெ. 530, கொழும்பு 1,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 9 ந உ.

3–502—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

# துணைவிதிகள்

எல். டீ. பீ.—31/45.

## வத்தளை—மாபோலைப் பட்டினம்

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ் வத்தளை — மாபோலைப் பட்டினத்தின் விசேட ஆணையாளரால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜி. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 1 ந உ.

### அபாயகரமானவையும் அருவருப்பானவையுமான தொழில்கள் சம்பந்தமான துணைவிதிகள்

1. பின்வரும் தொழில்கள் அருவருப்பான தொழில்களாகக் கருதப்படல் வேண்டும் :—

கரி சேகரித்து வைத்திருத்தல்
வெள்ளாட்டுப்பட்டியொன்றை வைத்திருத்தல்
தோல் பதனிடுஞ்சாலையொன்று வைத்திருத்தல்
பசளை சேகரித்து வைத்திருத்தல்
படகு செய்யும் காலையொன்று வைத்திருத்தல்
மூன்று அந்தருக்கதிகமான கருவாடு சேகரித்து வைத்திருத்தல்
மூன்று அந்தருக்கதிகமான மாசி சேகரித்து வைத்திருத்தல்
கள் சேகரிக்கும் வாடியொன்று வைத்திருத்தல்
உப்பிட்ட அல்லது பதனிட்ட மீன் சேகரித்து வைத்திருத்தல்
சுண்ணாம்பு சேகரித்து வைத்திருத்தல்
ஓட்டுவேலைக்கூடமொன்று வைத்திருத்தல்

2. பின்வரும் தொழில்கள் அபாயகரமான தொழில்களாகக் கருதப்படல் வேண்டும் :—

தும்பு சேகரித்து வைத்திருத்தல்
கொல்லுலையொன்று வைத்திருத்தல்
சைக்கிள் திருத்தும் கடையொன்று வைத்திருத்தல்
மோட்டார் வேலைக் கூடமொன்று வைத்திருத்தல்
மரமரியும் ஆலையொன்று வைத்திருத்தல்
வெற்றுச் சாக்குக்கள் சேகரித்து வைத்திருத்தல்
வைக்கோல் சேகரித்து வைத்திருத்தல்
ஆபரணங்கள் உற்பத்தி செய்தல்
செக்கு ஒன்று வைத்திருத்தல்
வெற்றுப்போத்தல்கள் சேகரித்து வைத்திருத்தல்
கயிற்றினால் அல்லது தும்பினால் செய்யப்பட்ட பொருட்கள் சேகரித்து வைத்திருத்தல்
தீந்தைகள், வார்னிஷ் சேகரித்து வைத்திருத்தல்

3. பின்வரும் தொழில்கள் அபாயகரமானவையும் அருவருப்பானவையுமான தொழில்களாகக் கருதப்படல் வேண்டும் :—

ஐம்பது கலன்களுக்கதிகமாக தேங்காயெண்ணெய் சேகரித்து வைத்திருத்தல்
வெட்டுமரக்காலையொன்று வைத்தல்
வானொலிப்பெட்டி திருத்துவதற்கான கடையொன்று வைத்தல்.

3–480—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

## தலவாக்கொல்லே—லிந்துலே நகர சபை

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ் தலவாக்கொல்லே — லிந்துலே நகர சபை யால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவினால் தமக் குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 1 ந் டீ.

### துணைவிதி

1. சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பொதுச் சந்தைகள் (பாகம் 16) சம்பந்தமான நியமத் துணைவிதிகளின் 4 ஆவது துணைவிதியின் நோக்கங்களுக்கு ஒரு அனுமதிப்பத்திரத்துக்கான வாடகை பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

| | | மாத மொன்றுக்கு ரூ. ச. |
|---|---|---|
| 1. | மாட்டிறைச்சிக்கடையொன்றுக்கு .. .. | 75 00 |
| 2. | ஆட்டிறைச்சிக்கடையொன்றுக்கு .. .. | 60 00 |
| 3. | மீனகடையொன்றுக்கு .. .. | 25 00 |
| 4. | காய்கறிக்கடையொன்றுக்கு .. .. | 20 00 |
| 5. | கடையொன்றுக்கான இடத்துக்கு .. .. | 27 50 |

2. சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பொதுச் சந்தைகள் (பாகம் 16) சம்பந்தமான நியமத் துணைவிதிகளின் 16 ஆவது துணைவிதியின் நோக்கங்களுக்கு உத்தரவுப்பத்திரம் நடைமுறையிலிருக்கும் ஒவ்வொரு மாதத்துக்கும் கட்டணம் ஒரு ரூபாவாக இருத்தல் வேண்டும்.

3-481—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

எல். டீ.—பீ. 63/49

## கேகாலே நகர சபை

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

(255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ் கேகாலே நகர சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 154 ம் பிரிவின் கீழ் தமக்களிக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு 1,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 1 ந் டீ.

### துணைவிதி

1952, செத்தெம்பர் 5ன் 10,443 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டுக் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டபடியான 1952 ம் ஆண்டின் கேகாலேச் சந்தைத் துணைவிதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :—

(1) 2 ம் துணைவிதியில் " பொதுச் சந்தை " யின் வரையறையை உடனடுத்துப் பின்வரும் புதிய வரையறையைச் சேர்ப்பதன் மூலமும் :—

" முறைச் சந்தை " என்பது சபையால் நிறுவப்பட்ட கேகாலே முறைச் சந்தை எனப்பொருள்படும் ;

(2) 23 ம் துணைவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய துணை விதிகளைச் சேர்ப்பதன் மூலமும் :—
" கேகாலே முறைச் சந்தை ".

24. சபை, காலத்துக்குக் காலம் அதன் சார்பில் நிறைவேற்றும் தீர்மானத்தினால் நிர்ணயிக்கக்கூடியவாறான அத்தினங்களிலும் அந்த நேரங்களுக்கு இடையிலும் அந்த வளவுகளிலும் முறைச் சந்தை நடைபெறவேண்டும்.

25. (1) எந்த நபரும் முறைச் சந்தை வளவுகளுக்குள் காய்கறிகள், பழம், நாட்டரிசி, நெல், தேங்காய்கள், புளி, கொள்ளு, குரக்கன், கடலைகள், தானியங்கள், பருப்புகள், சிறுபழங்கள் (பெரி) கிழங்குகள், மீன், இறைச்சி (பச்சையாக வற்றலாக அல்லது உப்பிட்டதாக இருந்தாலும்) செத்தல் மிளகாய், வெங்காயம், புடவைகள் அல்லது உடைகள் எதையும், அதன் சார்பில் தலைவரால் அல்லது அவரது உத்தரவின் கீழ் வழங்கப்பட்ட விசேட உத்தரவுப்பத்திரமொன்றை அவர் வைத்திருந் தாலன்றி விற்பனை செய்ய அல்லது விற்பனைக்காக வைத்திருக்கக்கூடாது.

(2) (1) ம் பந்தியின் கீழ் வழங்கப்படும் விசேட உத்தரவுப்பத்திரம் ஒவ்வொன்றும்

(அ) பொருளளவில் இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடபபட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) அதில் குறிப்பிட்டுள்ளவாறான காலத்துக்கு நடைமுறையிலிருத்தல் வேண்டும் ;

(இ) இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் கொடுபட்டதன் மேல் வழங்கப்படுதல் வேண்டும்.

26. (1) 25 ம் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட விசேட உத்தரவுப் பத்திரமொன்றை வைத்திருக்கும் எவரும், தலைவரின் எழுத்திலான அனுமதியின்றி—

(அ) தமது உத்தரவுப்பத்திரத்தை வேறெந்த நபருக்கு மாற்ற, அல்லது

(ஆ) தமக்கென ஒதுக்கப்பட்ட கடையின் அல்லது வெளியிடத்தின் எந்தப் பகுதியையும் உப வாடகைக்கு விட அல்லது

(இ) தமது ஊழியர் அல்லது ஏஜன்ட் தவிர்ந்த வேறெந்த நபரையும் தமக்கென ஒதுக்கப்பட்ட கடையின் அல்லது வெளி இடத்தின் எப்பகுதியையும் உபயோகிப்பதற்கு அல்லது ஆட்சி செலுத்து வதற்கு அனுமதிக்கக்

கூடாது.

(2) எந்த நபரும் தலைவரின் எழுத்திலான அனுமதியின்றி, சொல்லப்பட்ட மாற்றம் அல்லது உபகுத்தகை எதன் கீழும் முறைச் சந்தை வளவினுள்ள கடை அலலது வெளி இடம் எதையும் உபயோகிக்க அல்லது ஆட்சி செலுத்தக்கூடாது.

(3) சபைப் பணிமனையின் தன் பெயர் பதிவு செய்யப்படாத எந்த விற்பனையாளரும் முறைச் சந்தை வளவினுள்ள கடை அல்லது வெளி இடம் எதிலும் இடம் பெறும் எந்த விற்பனையிலும் பங்குபற்றக்கூடாது.

27. முறைச் சந்தை வளவுக்குள் எந்த நபரும் மு. ப. 6.00 மணிக்கும் பி. ப. 6.00 மணிக்குமிடையே—

(அ) முறைச் சந்தைக்கு வரும் எந்த நபரினதும் கைரேகை பார்க்க அல்லது முன்வர அல்லது எதிர்காலப்பலன்கூற அல்லது

(ஆ) எந்த வகையான மருந்துகள் அல்லது மருந்துச் சரக்குகள்பற்றி விளம்பரம் செய்ய, அவற்றை விற்பனை செய்ய அல்லது விற்பனை செய்வதற்கு வைத்திருக்க, அல்லது

(இ) முறைச்சந்தை வளவுக்கு முன் அல்லது அதற்கருகில் முறைச் சந்தைக்கு வந்திருக்கும் நபர்களிடமிருந்து தானம் கேட்க அலலது

(ஈ) சமயம் எதுவும் போதிக்க அல்லது பகிரங்கச் சொற்பொழிவுகள் ஆற்ற அல்லது முறைச் சந்தைக்கு வந்திருக்கும் நபர்களிட மிருந்து உதவுதொகைகள் சேகரிக்க, அல்லது

(உ) கவிகள், பாட்டுகள் அல்லது நூல்கள் எதையும் விளம்பரம் செய்ய, வாசிக்க, பாட அல்லது விற்பனை செய்யக்

கூடாது.

28. எந்த நபரும் முறைச்சந்தையில் வாங்கிய எந்தப் பொருளையும் மீண்டும் முறைசசந்தை வளவுக்குள் விற்பனை செய்யக்கூடாது.

29. 25 ம் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள விசேட உத்தரவுப் பத்திரங்கள் வைத்திருப்பவர்கள் அல்லது ஏனைய உத்தரவு பெற்ற ஊழியர்கள் மத்தியில அல்லது அவ்வாறான உத்தரவுப் பத்திரங்கள் வைத்திருப்பவர்களுக்கும் அல்லது அவர்களின் ஊழியர்களுக்கும் பொது மக்களுக்குமிடையே முறைச்சந்தையை உபயோகிப்பது சம்பந்தமாக எழும் பிணக்கு எதுவும் தலைவரால் அல்லது தலைவரால் அதிகாரம் வழங்கப் பட்டவரும் முறைச்சந்தை வளவுக்குள் கடமையாற்றிக்கொண்டிருப்பவரு மான எந்த உத்தியோகத்தரால் அல்லது சபையின் அரசிறைப் பரிசோதகரால் தீர்த்துவைக்கப்படலாம்.

30. முறைச்சந்தை வளவுக்குள், அந்த நோக்கத்துக்காக நியமிக்கப்பட்டுள்ளவரும் முறைச்சந்தை வளவுக்குள் கடமையாற்றிக் கொண்டிருப்பவருமான சபையின் உத்தியோகத்தரொருவரால் ஒழுங்கு நிலைநாட்டப்படவேண்டும்.

31. பொருட்களை விற்பனை செய்வதற்காக அல்லது வாங்குவதற்காக முறைச் சந்தைக்கு வந்திருக்கும் சகல நபர்களும், பிணக்கு எதையும் தீர்த்துவைப்பதில் அல்லது ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு தலைவரால் அல்லது அதற்கென உரிய முறையில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள சபை உத்தியோகத்தரொருவரால் இடப்படும் கட்டளைக்கு அமைந்து நடக்க வேண்டும்.

32. எந்த நபரும் முறைச் சந்தை வளவுக்குள்—

(அ) சபையால் எதையும் செய்ய அல்லது

(ஆ) ஒழுங்கீனமான முறையில் நடத்துகொள்ள அல்லது சத்தம் அல்லது குளப்பம் எதையும் உண்டுபண்ண அல்லது வேறெந்த நபருடனும் சண்டை செய்ய அல்லது அவமதிப்பான இகழ்ச்சியான அல்லது தூஷணையான சொற்களை உபயோகிக்க அல்லது,

(இ) தம்மைப்பற்றிய திருப்திகரமான விபரங்களை அளிக்க முடியாத நிலையில் காரணமின்றி நடமாடிக்கொண்டு அல்லது சபையின் அரசிறைப்பரிசோதகரால் அல்லது தலைவரினது அதிகாரத்தின் கீழ் செயலாற்றும் ஒரு அரசாங்க உத்தியோகத்தரால் அல்லது எந்த நபரால் வெளியேறுமாறு கட்டளையிடப்பட்ட பின்னர் இருக்க,

(ஈ) முறைச்சந்தை வளவினுள்ள கடைகள், அல்லது சபைக்குச் சொந்தமான தளபாடங்கள், விளக்குகள் அல்லது வேறு சொத்துகளின் எப்பகுதியையும் உருவழிக்க

(உ) முறைச்சந்தை வளவுக்குள் நாய் அல்லது வாகனம் எதையும் எடுத்துச் செல்ல

கூடாது.

33. விசேட உத்தரவுப்பத்திரமொன்று வைத்திருக்கும் எவரும்—

(அ) முறைச்சந்தைக்குச் செல்லும் எந்த நபரையும் அவமதிப்புக்குள்ளாக்க, தொந்தரவு செய்ய, அல்லது தாமதிக்கவைக்க,

(ஆ) தாம் சரும நோய், ஒட்டுவாரொட்டிநோய் அல்லது தொற்று நோய் எதனுலும் பீடிக்கப்பட்டிருக்கும்போது அங்குள்ள தனது கடையில், ஆசனத்தில் அல்லது வெளி இடத்தில் இருக்க அல்லது அங்கு நடைபெறும் எந்த விற்பனையிலும் பங்குபற்ற அல்லது அவ்வாறான நோய் எதனுலும் பீடிக்கப்பட்டிருக்கும் எந்த நபரையும் அங்கு நடைபெறும் எந்த விற்பனையிலும் பங்கு பற்றுவதற்காக வேலைக்கமர்த்த அல்லது அனுமதிக்க

(இ) தலைவரின் எழுத்திலான அனுமதியின்றித் தமது கடையின், ஆசனத்தின் அல்லது வெளி இடத்தின் எப்பகுதியையும் மூட அல்லது அவ்வாறான கடை, ஆசனம் அல்லது வெளி இடத்தில் தற்காலிகமாகவேனும் நிரந்தரமாகவேனும் தட்டி அல்லது கூரை எதையும் நிறுவ அல்லது மாற்றங்கள் எதையும் செய்ய

(ஈ) தலைவரின் அனுமதியின்றி தமது கடைக்குள், ஆசனத்துள் வெளி இடத்துள் சபையின் சொத்தில்லாத பெட்டி, மேசை, கதிரை அல்லது இதுபோன்ற தளபாடப் பொருட்கள் எதையும் கொண்டுவர அல்லது அதில வைத்திருக்க அலலது அவ்வாறான கடையில் அல்லது வெளி இடத்தில் குடில் அல்லது இணைப்பு எதையும் நிர்மாணிக்க,

(உ) தமது கடையில், ஆசனத்தில் அல்லது வெளி இடத்தில், தமது உத்தரவுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்காத அல்லது சபையினுல் விலக்கப்பட்டிருக்கும் அல்லது பொதுமக்களின் ஆரோக்கியத்துக்கு ஒவ்வாத அல்லது எந்த வகையிலும் தீங்குவிளைவிக்கக் கூடிய எப்பொருளையும் விற்பனைக்காக வெளியில் வைத்திருக்க அல்லது வைத்திருக்க

கூடாது.

34. (1) 25 ம் துணைவிதியின் கீழ் வழங்கப்படும் விசேட உத்தரவுப் பத்திரம் எதையும், முறைச் சந்தை சம்பந்தமான எந்தத் துணை விதிகளையும் மீறியதற்காக அவ்வாறான நீதிமன்றத்தினுல் உத்தரவுப் பத்திரம் வைத்திருப்பவர் மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்படும் இரண்டாவது அல்லது அதற்கு அடுத்த தடவையொன்றில் இரத்துச் செய்வதற்கு தகுதியானதொரு நீதி மன்றத்துக்குச் சட்டரீதியான உரிமையுண்டு.

(2) (1) ம் பந்தியின் கீழ் இரத்துச் செய்யப்பட்ட முன்னைய உத்தரவுப் பத்திரத்தின் உரிமையாளர் எவருக்கும் 25 ம் துணைவிதியின் விசேட உத்தரவுப் பத்திரமொன்றை வழங்குவதற்குத் தலைவர் மறுக்கலாம்.

(3) தலைவரால் அல்லது இத்துணைவிதிகளின் கீழ தலைவரால் முறையாக அதிகாரம் வழங்கப்பட்ட சபை உத்தியோகத்தர் ஒருவரால் இடப்பட்ட சட்டரீதியான கட்டளை எதற்கும் அமைந்து நடக்கத்தவறும் எந்த நபருக்கும் புதிய உத்தரவுப்பத்திரமொன்றை வழங்குவதற்குத் தலைவர் மறுக்கலாம்.

35. (1) முறைச் சந்தை வளவுக்குள் விற்பனைக்காக வெளியில் வைக்கப்பட்டிருக்கும் உணவுப்பொருள் எதையும் பரிசோதித்து அந்தப் பொருள் ஆரோக்கியத்துக்கு ஏற்றதல்லவென்று அவருக்குத் தோன்றுமிடத்து அதனைக் கைப்பற்றுதற்கு தலைவருக்கு அல்லது தலைவரின் அதிகாரத்தின் கீழ் செயற்படும் சபையின் எந்த உத்தியோகத்தருக்கும் சட்டரீதியான உரிமையுண்டு.

(2) (1) ம் பந்தியின் கீழ் கைப்பற்றப்படும் எப்பொருளும் ஆரோக்கியத்துக்கு ஏற்றதல்லவென்று அரசாங்க வைத்திய உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படுமிடத்து அவ்வாறான பொருள், அது யார் வசமிருந்து கைப்பற்றப்பட்டதோ அந்த நபருக்கு நஷ்ட ஈடுகொடுக்கப்படாமல் அழிக்கப்படவேண்டும்.

36. எந்த நபரும் முறைச்சந்தையைக் கண்காணிப்பதற்காகத் தலைவரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது நபர் எவரையும் அவர் தம் கடமைகளை நிறைவேற்றுவதில் எதிர்க்கவோ தடைசெய்யவோ மறுப்புக்காட்டவோ தொந்தரவு செய்யவோ கூடாது.

37. எந்த நபரும்—

(அ) முறைச்சந்தை நடைபெறும் தினத்துக்கு முந்திய தினத்தன்று பி.ப. 6.00 மணிக்கு முன்னர் முறைச்சந்தை வளவுக்குள் குடில் அல்லது கூரை எதையும் நிர்மாணிக்கவோ பாய் அல்லது சாக்கு எதனையும் வைத்துவிட்டுப் போகவோ அல்லது

(ஆ) முறைச் சந்தை நடைபெறும் தினத்தன்று பி. ப. 6.00 மணிக்குப் பின்னர் முறைச் சந்தை வளவுக்குள் குடில், கூரை, பாய் அல்லது சாக்கு எதையும் விட்டுவிட்டுப் போக

கூடாது.

38. (1) முறைச் சந்தை நடைபெறும் தினத்தன்று பி.ப. 6.00 மணிக்குப் பின்னர் முறைச் சந்தை வளவுக்குள் காணப்படும் குடில் அல்லது கூரை எதையும் உடைத்தெறிவதற்கு அல்லது பாய் அல்லது சாக்கு அல்லது வேறு பொருள் எதையும் அகற்றுவதற்கு தலைவருக்கு அல்லது தலைவரின் உத்தரவின் கீழ் செயலாற்றும் சபையின் வேறெந்த உத்தியோகத்தருக்கு சட்டரீதியான உரிமையுண்டு.

(2) 38 (1) ம் துணைவிதியின் ஏற்பாட்டை அமுல் நடத்துவதனுல் ஏற்படும் நட்டத்துக்கு அல்லது சேதத்துக்கு எவரும் நஷ்ட ஈடு கோரக்கூடாது.

39. 24 லிலிருந்து 38 வரையிலான துணைவிதிகளில் எதையும் மீறும் ஒவ்வொரு தடவையும் இருநூற்றைம்பது ரூபாவுக்கு மேற்படாத அபராதத்துடன் கூடியதும் தொடர்ந்தும் மீறும் விடயத்தில் தகுதியான நீதிமன்றமொன்றினுல் அதற்கான குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அல்லது அவ்வாறான மீறுதலைக் கவனத்துக்குக் கொண்டு வந்து தலைவரிடமிருந்து அல்லது தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரிடமிருந்து எழுத்திலான அறிவித்தலொன்று கொடுக்கப்பட்ட பின்னர் தொடர்ந்து மீறும் ஒவ்வொரு தினத்துக்கும் இருபத்தைந்து ரூபாவுக்கு மேற்படாத மேலதிக அபராதத்துடன் கூடியதுமான தண்டனைக் குரிய குற்றமாகும்.

40. 3 லிருந்து 23 வரையிலான துணைவிதிகளின் ஏற்பாடுகள் முறைச்சந்தைக்கு பொருத்தமுடையனவாகா.

## அட்டவணை

### விசேட உத்தரவுப்பத்திரப் படிவம்

இல. (முன்பக்கம்) திகதி :

கேகாலை, நகர சபைத் தலைவர்................................
ஆகிய நான்..............................................ல்
வசிக்கும் திரு..................................அவர்களுக்கு
கேகாலை முறைச்சந்தையில் அவருக்கென ஒதுக்கப்பட்டுள்ள கடையில்
அல்லது வெளியிடத்தில்..............................
விற்பனை செய்வதற்கு அல்லது விற்பனைக்காக வெளியில் வைத்திருப்பதற்கு இத்தால் அனுமதியளிக்கிறேன்.

இந்த உத்தரவுப்பத்திரம்................................வரை நடைமுறையில் இருப்பதுடன் கேகாலை முறைச்சந்தை சம்பந்தமான துணைவிதிகளுக்கும் இதன் பின்பக்கத்தில் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமையவும் வழங்கப்படுகின்றது.

———————
தலைவர்.

(பின்பக்கம்)

(மறுபுறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள்)

1. இந்த உத்தரவுப்பத்திரம் மாற்றத்துக்குரியதல்ல.

2. தலைவரால் அதன் சார்பில் அதிகாரம் வழங்கப்பட்ட எந்த உத்தியோகத்தரால் அல்லது சபையின் அரசிறைப் பரிசோதகரால் கேட்கப்படும்போது இந்த உத்தரவுப்பத்திரம் காட்டப்படல்வேண்டும்.

3. கேகாலை முறைச்சந்தை சம்பந்தமான துணைவிதிகள் எதையும் மீறியதற்காக உத்தரவுப்பத்திரம் வைத்திருப்பவர் மீது இரண்டாவது அல்லது அதற்கடுத்த தடவையில் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்பேரில் இந்த உத்தரவுப்பத்திரம் இரத்தாவதற்குப் பாத்திரமாகும்.

அட்டவணை

**வாடகைப்பண விகிதங்கள்**

ஒரு வெளி இடத்தில் அல்லது கடையில் பொருள் அல்லது பொருள்களை எதையும் விற்பனை செய்வதற்கான விசேட உத்தரவுப்பத்திரம் :—

| திறந்த வெளியில் | வாடகைப்பணம் தினமொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ. ச. |
|---|---|
| (அ) 10 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 0 25 |
| (ஆ) 10 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 15 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து | 0 50 |
| (இ) 15 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 32 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து | 0 75 |
| (ஈ) 32 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 60 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து | 1 0 |
| (உ) 60 சதுர அடிக்கு மேற்படுமிடத்து, 1.00 ரூபாவுடன் மேலதிகமான ஒவ்வொரு சதுர அடிக்கும் 5 சதங்கள் வீதம் சேர்த்தும் | |
| (கடைகள்) | |
| (ஊ) ஒவ்வொரு கடைக்கும் .. .. | 2 50 |

3-482—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் சிலாபம் மாவட்டத்திலுள்ள காக்காப்பள்ளிக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ம் உட்பிரிவினால் உள்ளூராட்சி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு அவரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜி. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1.3.1970.

**அருவருப்பானவையும் அபாயகரமானவையுமான தொழில்கள் பற்றிய துணைவிதிகள்**

1. பின்வரும் தொழில்கள் அபாயகரமான தொழில்களாகக் கருதப்படுதல் வேண்டும் :—

கொப்பரு உற்பத்தி செய்தல்.

உபகரணத்தினால் எண்ணெய் பிழிதல்.

கபூக், கிரவல் அல்லது கருங்கல்லுக்காக அகழ்தல்.

கொப்பரு சேகரித்துவைத்திருத்தல்.

வைக்கோல் சேகரித்துவைத்திருத்தல்.

தேங்காய்த்துருவல் உற்பத்தி செய்தல்.

குழிவெட்டி முருகைக் கற்களெடுக்கத் தோண்டுதல்.

சுண்ணம்புச் சூளையொன்று வைத்தல்

இறப்பர் உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்துவைத்திருத்தல்.

ஒக்ஸி–வெல்டிங் செய்யும் கொல்வேலைத்தலம் வைத்தல்.

வெட்டுமரக்காலையொன்று வைத்திருத்தல்.

ஆபரணங்கள் உற்பத்தி செய்தல்.

அச்சுக்கூடம் ஒன்றுவைத்தல்.

அரிசி ஆலையொன்று வைத்திருத்தல்,

செக்கினால் தேங்காயெண்ணெய் உற்பத்தி செய்தல்.

எந்திரத்தினால் மிளகாய், கோப்பி கோதுமை, தானியம், கறிச்சரக்குகள் அல்லது வேறு பருப்புகள் அரைத்தல்.

மோட்டார் வாகனங்கள் திருத்தும் காலையொன்றுவைத்திருத்தல்.

மின்தறியினால் புடவை உற்பத்திசெய்வதற்கு உத்தரவுப்பத்திரம் பெறுதல்.

டயர்களை அல்லது ரியூப்புகளை வல்கனைஸ் செய்யும் நிறுவனமொன்று வைத்திருத்தல்.

பைசிக்கிள் திருத்தும் இடம் ஒன்று வைத்திருத்தல்.

தச்சுவேலைத்தளமொன்று வைத்தல்.

தளபாடங்கள் உற்பத்தி செய்தல்.

மரமரியும் இடமொன்று வைத்திருத்தல்.

மரமரியும் ஆலையொன்று வைத்திருத்தல்.

விறகுக்காலையொன்று வைத்திருத்தல்.

கரிக்காகத் தேங்காய்ச் சிரட்டைகள் சுடுதல்.

2. பின்வரும் தொழில்கள் அருவருப்பான தொழில்களாகக் கருதப்படுதல் வேண்டும் :—

பதம்படுத்திய மீன் அல்லது கருவாடு சேகரித்துவைத்திருத்தல்.

மொத்த விற்பனையின்பொருட்டு பதனழியக் கூடிய உணவுப் பொருட்களையும் பதார்த்த பண்டங்களையும் சேகரித்துவைத்திருத்தல்.

பசளை அல்லது செயற்கை உரம் உற்பத்தி செய்தல்.

வினாகிரி உற்பத்தி செய்தல்.

சவர்க்காரம் உற்பத்தி செய்தல்.

தோல்பதனிடுஞ்சாலையொன்று வைத்தல்.

பாக்குகள் பக்குவஞ் செய்தல்.

இரத்தம் அல்லது கழிவிறைச்சி அவித்தல்.

எலும்புகள் சேகரித்துவைத்திருத்தல்.

மீனுக்கு பனிக்கட்டியிடல்.

பீடிகள் உற்பத்தி செய்தல்.

பலகைகள் பக்குவம் பண்ணல்.

பாணி அல்லது வெல்லம் உற்பத்தி செய்தல்.

சோடா உற்பத்தி செய்தல்.

கள் சேகரிக்கும் நிலையமொன்றுவைத்தல்.

தேங்காய்மட்டை ஊறப்போடும் இடமொன்றுவைத்திருத்தல்.

வர்ணப்பூச்சுகள் அல்லது வார்னிஷ் சேகரித்துவைத்திருத்தல்.

வெற்றுச்சாக்குகள் சேகரித்துவைத்திருத்தல்.

3. பின்வரும் தொழில்கள் அபாயகரமானவையும் அருவருப்பானவையுமான தொழில்களாகக் கருதப்படுதல் வேண்டும் :—

தும்புக்குச் சாயமேற்றுதல்.

செங்கற்கள் அல்லது ஓடுகள் சுடுதல்.

பற்றறிகளுக்கு மின்னூட்டல்.

சுண்ணம்பு சுடுதல், சேகரித்துவைத்திருத்தல், பக்குவம்பண்ணல் அல்லது அகழ்தல்.

3-472—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

## பெல்மதுலைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் பெல்மதுலைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்.

ஈ. ஜி. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1.3.1970.

### துணைவிதிகள்

#### தற்காலிக அமைப்புகள்

1. சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் தலைவரால் அதன் சார்பில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றின் அதிகாரத்தின் பேரிலன்றி தற்காலிக அமைப்பு எதையும் எவரும் எழுப்பவோ எழுப்புவிக்கவோ கூடாது.

2. 1 ஆம் துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற விரும்பும் எவரும் அதற்கென தலைவருக்கு விண்ணப்பஞ் செய்ய வேண்டியதுடன், அத்தகைய விண்ணப்பத்தில்—

(அ) அத்தற்காலிக அமைப்பு எழுப்பப்பட உத்தேசிக்கப்பட்ட இடத்தையும் ;

(ஆ) அவ்வமைப்பின் தன்மைகளையும் அளவுகளையும் ;

(இ) அவ்வனுமதிப்பத்திரம் தேவையான காலத்தையும்,

(ஈ) அத்தற்காலிக அமைப்பு என்ன நோக்கத்துக்கு உபயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்பதையும்,

கூறுதல் வேண்டும்.

3. தற்காலிக அமைப்பெதனையாவது எழுப்புவதற்கான 1 ஆம் துணைவிதியின் கீழுள்ள அனுமதிப்பத்திரம் ஒன்று—

(அ) உத்தேச அமைப்பு நிலையம், சுற்றாடலின் வசதிகளைத் தடை செய்யக்கூடிய பிரதானமான ஒரு இடத்தில் இருந்தால், அல்லது

(ஆ) அத்தகைய நிலையம் பஸ்கள், கைவண்டிகள், வண்டிகள் அல்லது வாடகைக் கார்களுக்கான பொது நிற்பாட்டிடமாக ஏற்கெனவே உபயோகத்திலிருந்தால், அல்லது

(இ) அத்தற்காலிக அமைப்பு என்ன உபயோகத்திற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதோ அந்த உபயோகம் எவ்வகைப்பட்ட தொல்லையை யாவது உண்டாக்கக்கூடியதாயிருந்தால் ; அல்லது

(ஈ) அத்தற்காலிக அமைப்பு அதிகாரமளிக்கப்படாத தொழில் எதனையாவது நடாத்த உத்தேசிக்கப்பட்டால் ; அல்லது

(உ) அவ்வமைப்பு வீதியெதிலும் ஏதேனும் தடையை அல்லது அத்துமீறலை ஏற்படுத்தக்கூடியதாயிருந்தால்,

வழங்கப்படலாகாது.

4. 1 ஆம் துணைவிதியின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப் பத்திரத்துக்கும் இதனகத்திலுள்ள அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் விகிதப்படியான ஒரு கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும்.

5. 1 ஆம் துணைவிதியின் கீழ் தற்காலிக அமைப்பு எதன்பொருட்டும் அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்கும் தலைவர் அல்லது உத்தியோகத்தர் அத்தற்காலிக அமைப்பு எவ்வளவு காலத்திற்கு நிற்க அனுமதிக்கப்படும் என்பதை அத்தகைய அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுக் காட்டுதல் வேண்டும்.

6. 1 ஆம் துணைவிதியின்படி வழங்கப்பட்ட ஒரு அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தைக் கொண்டு தற்காலிக அமைப்பு எதையும் எழுப்பும் அல்லது எழுப்புவிக்கும் ஒவ்வொருவரும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்ட காலம் முடிவடைந்ததும் அந்தத் தற்காலிக அமைப்பை அழித்துவிடவேண்டும் அல்லது அழிக்கச் செய்ய வேண்டும்.

7. முதலாம் துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் எதிலும் அத்தகைய அனுமதிப்பத்திரம் என்ன நிபந்தனைகளுக்கமைய வழங்கப்படுகின்றதென்பதை தலைவர் குறிப்பிடலாம்.

8. இவற்றுள் ஏதாவது ஒரு துணைவிதியை அல்லது 1 ம் துணைவிதியின்படி வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை மீறும் செயல் ஒவ்வொன்றும் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத ஒரு அபராதத்தினால் தண்டிக்கப்படற்பாலதாகும். தொடர்ந்தும் மீறும் சந்தர்ப்பத்தில் நியாயாதிக்கம் உள்ள நீதிமன்றமொன்று அதற்காகக் குற்றவாளியாகக் கண்டபின்னர் அக்குற்றத்தைத் தொடர்ந்து செய்த ஒவ்வொரு நாளுக்கும் மேலதிகமாக இருபத்தியைந்து ரூபாவுக்கு மேற்படாத ஒரு அபராதத்தினாலும் தண்டிக்கப்படற்பாலதாகும்.

9. இத்துணைவிதிகளில்—

" தலைவர் " என்பது சபைத் தலைவர் எனப்பொருள்படும்.

" சபை " எனில் பெல்மதுலைப் பட்டின சபை எனப்பொருள்படும்.

" கட்டளைச் சட்டம் " எனில் (256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும்.

" தற்காலிக அமைப்பு " என்பது தூக்கிச் செல்லக்கூடிய மேடை, பெயர்ச்சிச்சட்டம், படங்கு அடித்த மேடை, நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நிலத்தில் நாட்டப்பட்ட மூட்டுகளில் அடிக்கப்பட்ட படங்கு, அல்லது சக்கரங்களுடன் அமைக்கப்பட்ட நிலையான அமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கும்.

" பொது வழி " என்பது கட்டளைச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டது.

#### அட்டவணை

அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட காலம்—

| | | கட்டணம் ரூ. | ச. |
|---|---|---|---|
| (அ) ஒரு மாதத்துக்கு மேற்படாதவிடத்து | .. | 2 | 0 |
| (ஆ) ஒரு மாத்துக்கு மேற்படுமிடத்து | .. | 10 | 0 |

3–463—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## நாத்தாண்டியப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் நாத்தாண்டியப் பட்டின சபையால ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவினுல தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜி. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1.3.1970.

### துணைவிதிகள்

#### தற்காலிக அமைப்புகள்

1. சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் தலைவரால் அதன் சார்பில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றின் அதிகாரத்தின் பேரிலன்றி தற்காலிக அமைப்பு எதையும் எவரும் எழுப்பவோ எழுப்புவிக்கவோ கூடாது.

2. 1 ஆம் துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற விரும்பும் எவரும் அதற்கென தலைவருக்கு விண்ணப்பஞ் செய்ய வேண்டியதுடன், அத்தகைய விண்ணப்பத்தில்—

(அ) அத்தற்காலிக அமைப்பு எழுப்பப்பட உத்தேசிக்கப்பட்ட இடத்தையும் ;

(ஆ) அவ்வமைப்பின் தன்மைகளையும் அளவுகளையும் ;

(இ) அவ்வனுமதிப்பத்திரம் தேவையான காலத்தையும் ;

(ஈ) அத்தற்காலிக அமைப்பு என்ன நோக்கத்துக்கு உபயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்பதையும்,

கூறுதல் வேண்டும்.

3. தற்காலிக அமைப்பெதனையாவது எழுப்புவதற்காக 1 ஆம் துணைவிதியின் கீழுள்ள அனுமதிப்பத்திரம் ஒன்று—

(அ) உத்தேச அமைப்பு நிலையம், சுற்றாடலின் வசதிகளைத் தடை செய்யக்கூடிய பிரதானமான ஒரு இடத்தில் இருந்தால் ; அல்லது

(ஆ) அத்தகைய நிலையம் பஸ்கள், கைவண்டிகள், வண்டிகள் அல்லது வாடகைக் கார்களுக்கான பொது நிற்பாட்டிடமாக ஏற்கெனவே உபயோகத்திலிருந்தால், அல்லது

(இ) அத்தற்காலிக அமைப்பு என்ன உபயோகத்திற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதோ அந்த உபயோகம் எவ்வகைப்பட்ட தொல்லையை யாவது உண்டாக்கக்கூடியதாயிருந்தால் ; அல்லது

(ஈ) அத்தற்காலிக அமைப்பு அதிகாரமளிக்கப்படாத தொழில் எதனை யாவது நடாத்த உத்தேசிக்கப்பட்டால் ; அல்லது

(உ) அவ்வமைப்பு வீதியெதிலும் ஏதேனும் தடையை அல்லது அத்துமீறலை ஏற்படுத்தக்கூடியதாயிருந்தால்,

வழங்கப்படலாகாது.

4. 1 ஆம் துணைவிதியின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப் பத்திரத்துக்கும் இதனகத்திலுள்ள அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் விகிதப்படியான ஒரு கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும்.

5. 1 ஆம் துணைவிதியின் கீழ் தற்காலிக அமைப்பு எதன்பொருட்டேல் அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்கும் தலைவர் அல்லது உத்தியோகத்தர் அத்தற்காலிக அமைப்பு எவ்வளவு காலத்திற்கு நிற்க அனுமதிக்கப் படும் என்பதை அத்தகைய அனுமதிப்பத்திரம் குறிப்பிட்டுக்காட்டுதல் வேண்டும்.

6. 1 ஆம் துணைவிதியின்படி வழங்கப்பட்ட ஒரு அனுமதிப்பத்திரத் தின் அதிகாரத்தைக் கொண்டு தற்காலிக அமைப்பு எதையும் எழுப்பும் அல்லது எழுப்புவிக்கும் ஒவ்வொருவரும் அனுமதிப்பத்திரத்தில் குறிப் பிட்ட காலம் முடிவடைந்ததும் அந்தத் தற்காலிக அமைப்பை அழித்து விடவேண்டும் அல்லது அழிக்கச் செய்யவேண்டும்.

7. முதலாம் துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் எதிலும் அத்தகைய அனுமதிப்பத்திரம் என்ன நிபந்தனைகளுக்கமைய வழங்கப்படுகின்றதென்பதை தலைவர் குறிப்பிடலாம்.

8. இவற்றுள் ஏதாவது ஒரு துணைவிதியை அல்லது 1 ஆம் துணை விதியின்படி வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந் தனைகளை மீறும் செயல் ஒவ்வொன்றும் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத ஒரு அபராதத்தினால் தண்டிக்கப்படற்பாலதாகும். தொடர்ந்தும் மீறும் சந்தர்ப்பத்தில் நியாயாதிக்கம் உள்ள நீதிமன்றமொன்று அதற்காகக் குற்றவாளியாகக் கண்டபின்னர் அக்குற்றத்தைத் தொடர்ந்து செய்த ஒவ்வொரு நாளுக்கும் மேலதிகமாக இருபத்தைந்து ரூபாவுக்கு மேற் படாத ஒரு அபராதத்தினாலும் தண்டிக்கப்படற்பாலதாகும்.

9. இத்துணைவிதிகளில்—

" தலைவர் " என்பது சபைத் தலைவர் எனப்பொருள்படும்.

" சபை " எனில் நாத்தாண்டியப் பட்டின சபை எனப்பொருள்படும்.

" கட்டளைச் சட்டம் " எனில் (256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும்.

" தற்காலிக அமைப்பு " என்பது தூக்கிச் செல்லக்கூடிய மேடை, பெயர்ச்சிச்சட்டம், படங்கு அடித்த மேடை, நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நிலத்தில் நாட்டப்பட்ட மூட்டுகளில் அடிக்கப்பட்ட படங்கு, அல்லது சக்கரங்களுடன் அமைக்கப்பட்ட நிலையான அமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கும்.

" பொது வழி " என்பது கட்டளைச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டது.

### அட்டவணை

அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட காலம்—

| | | கட்டணம் ரூ. ச. |
|---|---|---|
| (அ) ஒரு மாதத்துக்கு மேற்படாதவிடத்து | .. .. | 0 50 |
| (ஆ) ஒரு மாதத்துக்கு மேற்படுமிடத்து மேலதிகமான ஒவ்வொரு மாதத்துக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் | .. | 0 50 |

3–464—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## மாத்தறை நகர சபை

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ் மாத்தறை நகர சபையால் ஆக்கப்பட்டு அக்கட்ட ளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் கீழ் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி .—

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 4 ந் உ.

### அருவருப்பானவையும் அபாயகரமானவையுமான தொழில்கள் சம்பந்தமான துணைவிதி

பின்வரும் தொழில்கள் அருவருப்பானவையும் அபாயகரமானவையு மான தொழில்களாகக் கருதப்படும் :—

பாரமுயர்த்தியுடன் கூடிய கார்ச்சேவை நிலையமொன்றைவைத்திருத் தல்

மோட்டார் சைக்கிள்களைத்திருத்தும் அல்லது நன்னிலைச்சேவையாற்றும் நிறுவனமொன்றை வைத்திருத்தல்.

பெற்றோல் நிரப்பும் நிலையமொன்றினை வைத்திருத்தல்.

ஒளிப்படக்கலைக்கூடமொன்றுவைத்திருத்தல்.

கடைச்சலெந்திரம், காய்ச்சியிணைக்கும் யந்திரம் உலை ஆகியவற்றுடன் கூடிய மோட்டார் வாகனம் திருத்தும் வேலைக்கூடமொன்றுவைத் திருத்தல்.

காய்ச்சியிணைக்கும் யந்திரம், உலை ஆகியவற்றுடன் கூடிய மோட்டார் வாகனம் திருத்தும் வேலைக்கூடமொன்றுவைத்திருத்தல்.

உலையுடன் கூடிய மோட்டார் வாகனம் திருத்தும் வேலைக்கூடமொன்று வைத்திருத்தல்.

ரயர்களையும் ரியூப்களையும் வல்கனைஸ் செய்யும் வேலைக்கூடமொன்று வைத்திருத்தல்.

பற்றறிகளுக்கு மின்னூட்டும் நிறுவனமொன்றுவைத்திருத்தல்.

தளபாடம் செய்யும் நிறுவனமொன்றுவைத்திருத்தல்.

சவப்பெட்டிகள் செய்து சேகரித்துவைத்திருக்கும் நிறுவனமொன்று வைத்திருத்தல்.

பிரப்பங்கற்றுப்பொருட்களைச் செய்து சேகரித்துவைத்திருக்கும் நிறுவன மொன்று வைத்திருத்தல்.

தளபாடம் தவிர்ந்த தச்சுத்தொழிற்கூடமொன்றுவைத்திருத்தல்.

எவ்வகையான எந்திரமும் உபயோகிக்கப்படும் மரமரியும் ஆலையொன் றுவைத்திருத்தல்.

தகர வேலைக்கூடமொன்றுவைத்திருத்தல்.

அச்சகமொன்றுவைத்திருத்தல்.

வெட்டுமரங்களைச் சேகரித்துவைத்திருப்பதற்கு காலை அல்லது சாலை யொன்றினை வைத்திருத்தல்.

விறகு சேகரித்துவைப்பதற்கு காலை அல்லது சாலையொன்றினை வைத்திருத்தல்.

1,000 கலன்களுக்கு அதிகமான மண்ணெண்ணெய்க்குதமொன்று வைத்திருத்தல்.

1,000 கலன்களுக்கு அதிகமான டீசல் எண்ணெய்க்குதமொன்று வைத்திருத்தல்.

தேங்காய்மட்டைகளை ஊறப்போடுவதற்கு 100 சதுர அடிக்கு மேற்பட்ட காலை ஒன்றுவைத்திருத்தல்.

மீன் பதனிடுவதற்கு, காயவைப்பதற்கு அல்லது பனிக்கட்டி இடுவதற்கு நிறுவனமொன்று வைத்திருத்தல்.

அரிசி குத்துவதற்கும் தவிடுபோக்குவதற்கும் நிறுவனமொன்று வைத்திருத்தல்.

மிளகாய், கறிச்சரக்குகள் ஆகியவற்றை அரைப்பதற்கு நிறுவனமொன் வைத்திருத்தல்.

கொல்லுலை அல்லது உலையொன்றுவைத்திருத்தல்.

ஆபரணம் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிறுவனமொன்று வைத்திருத்தல்.

மின்சார வேலைக்கூடமொன்று வைத்திருத்தல்.

கறுவா சேகரித்துவைத்திருத்தல்.

புல்லெண்ணெய் சேகரித்துவைத்திருத்தல்.

100 மூடைகளுக்கதிகமான சீமெந்து சேகரித்துவைத்திருத்தல்.

வர்ணதீந்தைகள், வார்னிஷ் சேகரித்துவைத்திருத்தல்.

100 ருத்தலுக்கதிகமான புண்ணாக்கு விலங்கு அல்லது பறவை உணவு சேகரித்துவைத்திருத்தல்.

20 சிப்பங்களுக்கதிகமான புகையிலை சேகரித்துவைத்திருத்தல்.

வெற்றுப்போத்தல்கள் சேகரித்துவைத்திருத்தல்.

வெற்றுச்சாக்குகள் சேகரித்துவைத்திருத்தல்.

உலோகங்கள் சேகரித்துவைத்திருத்தல்.

மொத்த விற்பனைக்காக பதனிழியக்கூடிய உணவுப் பொருட்களை சேகரித்துவைத்திருத்தல்.

அசெற்றிக் கமிலம் சேகரித்துவைத்திருத்தல்.

மெதனோல் சேர் மதுசாரம் மற்றும் மதுசாரங்கள் ஆகியவற்றைச் சேகரித்துவைத்திருத்தல்.

கரி சேகரித்துவைத்திருத்தல்.

பருத்திப் பஞ்சு அல்லது இலவம்பஞ்சு சேகரித்துவைத்திருத்தல்.

மிருகங்களின் தோல்கள், எலும்புகள் சேகரித்துவைத்திருத்தல்.

சுண்ணும்பு முருகைக்கல் சேகரித்துவைத்திருத்தல் சூளைவைத்தல்
சவர்க்காரம் உற்பத்தி செய்தல்.
இரேப் ரப்பர், ரப்பர்தாள் உற்பத்தி செய்தல்.
எந்திரத்தினுல் தேயிலை உற்பத்தி செய்தல்.
விஞகிரி உற்பத்தி செய்தல்.
எந்திரத்தினுல் தேங்காயெண்ணெய் உற்பத்தி செய்தல்.
தேங்காய்த் துருவல் உற்பத்தி செய்தல்.
கொப்பரு உற்பத்தி செய்தல்.
சுருட்டுகள் உற்பத்தி செய்தல்.
பீடிகள் உற்பத்தி செய்தல்
செயற்கை உரம் தயாரித்தல்.
துணிகளுக்குச் சாயமூட்டும், உலர்சலவை செய்யும்கடையொன்றுவைத் திருத்தல்.
பலகைகள் பாடம் செய்தல்
எந்திரத்தினுல் கருங்கல் நொருக்குதல்
கபுக்கல், இரவல்கள், அல்லது கருங்கல் தோண்டுதல்.
எந்திரத்தினுல் தும்பு அல்லது தும்புக்கயிறு உற்பத்தி செய்தல்.
பாணி சேகரித்துவைத்திருத்தல்.

3-445—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

எல். டி -பீ. 14/52

## இரத்தினபுரி மாநகர சபை

### மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

(252 ம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 272 ஆகிய பிரிவுகளின் கீழ் இரத்தினபுரி மாநகர சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 268 ம் பிரிவின் கீழ் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

கொழும்பு 1,
1969ம் ஆண்டு டிசம்பர் மீ 19 ந உ.

### துணை விதி

1927 நவெம்பர் 11 ந் திகதிய 7614 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 1960 செத்தெம்பர் 30 ந் திகதிய 12,207 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட துணைவிதியால் கடைசியாகத் திருத்தப்பட்டவாருன உத்தரவுப்பத்திரங்கள் சம்பந்தமான பொதுத் துணைவிதிகள், அதன் கண்ணுள்ள 1 ம் துணைவிதியில் " சொற்பொருள் விளக்கம் என்ற தலைப்பின் கீழ், " அருவருப்பு அல்லது அபாயம் விளைக்குந் தொழில் " என்றவரையறையில் " தச்சுத் தொழிற் சாலையொன்று வைத்தல் " என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—

" தச்சுத் தொழிற்சாலையொன்று வைத்தல்
கொல்லுலையொன்று வைத்தல்
நெசவாலையொன்று வைத்தல்
வானெலிப்பெட்டிகள் திருத்தும் கடையொன்று வைத்தல்
சாயமூட்டும் நிலையமொன்று வைத்தல்
தகரவேலைக்கடையொன்று வைத்தல்
பற்றறிகளுக்கு மின்னேற்றும் நிலையமொன்றுவைத்தல்
ஐஸ்கிறீம் விற்பனை செய்யும் கடையொன்றுவைத்தல்.
வாகனங்களுக்கு நன்னிலைச் சேவையாற்றும் நிலையமொன்றுவைத் தல்
மண்ணெண்ணெய் சேகரித்துவைத்தல்
டீசோலின் சேகரித்துவைத்தல்
மெதனேல் சேர்மதுசாரங்கள் சேகரித்துவைத்தல்
வெற்றுப் போத்தல்கள் சேகரித்துவைத்தல்
ஐஸ்கிறீம் உற்பத்தி செய்தல்
விற்பனைக்காகத் தளபாடங்களை உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்து வைத்தல்
விற்பனைக்காக சவப்பெட்டிகளை உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்து வைத்தல்
இரப்பர் பொருட்களை உற்பத்தி செய்தல்
கழிவு இரப்பர் உலரவைத்தல் அல்லது ஆலையிடுதல்
கிரேவல்கல் தோண்டுதல்
கபுக்கல் தோண்டுதல்
சுருட்டுக்கள் உற்பத்தி செய்தல்
இரப்பர் சேகரித்துவைத்தல்
25 அந்தருக்கதிகமான சீமெந்து சேகரித்துவைத்தல்
இயந்திர சக்திகொண்டு கல்லுடைத்தல்
ஒளிப்படக்கலைக்கூடமொன்றை வைத்தல் "

3-461—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆவது பிரிவின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள நிவித்திகலைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ஆவது பிரிவினுல் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 1 ந உ

### அருவருப்பானவையும் அபாயகரமானவையுமான தொழில்கள் சம்பந்தமான துணைவிதிகள்

1. பின்வரும் தொழில்கள் அருவருப்பான தொழில்களாகக் கருதப் படல் வேண்டும் :—

(அ) பதனிட்டமீன் அல்லது கருவாடு சேகரித்துவைத்திருத்தல்.
(ஆ) மொத்த விற்பனையின் பொருட்டு பதனிழியக்கூடிய உணவுப் பொருட்களையும் பதார்த்தங்களையும் சேகரித்துவைத்திருத்தல்.
(இ) விஞகிரி உற்பத்தி செய்தல்.
(ஈ) சவர்க்காரம் உற்பத்தி செய்தல்.
(உ) தோல் பதனிடுஞ்சாலையொன்று வைத்திருத்தல்.
(ஊ) தோல்கள் சேகரித்துத்திருத்தல்.
(எ) எலும்புகள் சேகரித்துவைத்திருத்தல்.
(ஏ) பாணி அல்லது வெல்லம் உற்பத்தி செய்தல்.
(ஐ) கள் சேகரிக்கும் நிலையமொன்றுவைத்திருத்தல்.
(ஒ) பீடிகள் உற்பத்தி செய்தல்.
(ஓ) உலோகப் பொருட் கடையொன்றுவைத்திருத்தல்.
(ஔ) 100 அந்தருக்கதிகமான சீமெந்து சேகரித்துவைத்திருத்தல்.
(க) புகையிலை சேகரித்துவைத்திருத்தல்.

2. பின்வரும் தொழில்கள் அபாயகரமான தொழில்களாகக் கருதப் படல் வேண்டும் :—

(அ) கொப்பரு உற்பத்தி செய்தல்.
(ஆ) கபுக்கல், பரல் அல்லது கல் தோண்டுதல்.
(இ) கொப்பரு சேகரித்துவைத்திருத்தல்.
(ஈ) வைக்கோல் சேகரித்துவைத்திருத்தல்.
(உ) வெட்டுமரக்காலையொன்றுவைத்திருத்தல்
(ஊ) ஆபரணம் உற்பத்தி செய்தல்.
(எ) கொல்லுலையொன்று வைத்திருத்தல்.
(ஏ) அச்சகமொன்றுவைத்திருத்தல்.
(ஐ) ஒட்சிஜின் உபயோகிக்கப்படும் கொல்லுலையொன்றுவைத்திருத் தல்.
(ஒ) அரிசி ஆலை அல்லது நெல்குத்தும் எந்திரமொன்றுவைத் ருத்தல்.
(ஓ) மூச்சுப்பானங்கள் உற்பத்திசெய்தல்.
(ஔ) வீதிக்கல் உடைத்தல்.
(க) மிளகாய், கோப்பி, கோதுமை, தானியம், கறிச்சரக்குகள் அல்லது வேறு பருப்புகள் அரைக்கும் இடமொன்றுவைத் திருத்தல்.

(ஙு) மின்சார அல்லது வானொலிப்பெட்டி திருத்தும் அல்லது வானொலிப்பெட்டி வேலைக்கூடமொன்று வைத்திருத்தல்.

(ச) வெற்றுச்சாக்குகள் சேகரித்துவைத்திருத்தல்.

(ஞ) ரயர்களை அல்லது ரியூப்களை வல்கனைஸ் செய்யும் நிறுவனமொன்று வைத்திருத்தல்.

(ட) பைசிக்கிள் திருத்தும் இடமொன்றுவைத்திருத்தல்.

(ண) தகர வேலைக்கடையொன்றுவைத்திருத்தல்.

(த) தச்சுத் தொழிற்கூடமொன்றுவைத்திருத்தல்.

(ந) தளபாடம் செய்யும் நிறுவனமொன்று வைத்திருத்தல்.

(ப) தளபாடக்கடையொன்றுவைத்திருத்தல்.

(ம) விறகுக்காலையொன்றுவைத்திருத்தல்.

(ய) விறகுசேகரித்துவைக்கும் இடமொன்று வைத்திருத்தல்.

(ர) காய்ச்சியிணைக்கும் அல்லது ஒட்சிஜனினால் காய்ச்சியிணைக்கும் நிறுவனமொன்று வைத்திருத்தல்.

(ல) எந்திரசக்தி பயன்படுத்தப்படாமல் மோட்டார் வாகனங்கள்திருத்தும் அல்லது அவற்றை நன்னிலையில் வைத்திருக்கின்ற சேவையாற்றும் நிறுவனமொன்று வைத்திருத்தல்.

(வ) சுண்ணக்கற்கள் அல்லது சுண்ணும்பு சேகரித்து வைத்திருத்தல்.

(ள) தேயிலைத் தொழிற்சாலையொன்று வைத்திருத்தல்.

3. பின்வரும் தொழில்கள் அருவருப்பானவையும் அபாயகரமானவையுமான தொழில்களாகக் கருதப்படல் வேண்டும் :—

(அ) எந்திரத்தினால் ரப்பருக்கு (தாள் அல்லது கிறேப் ரப்பர்) ப் புகையூட்டுதலும் உற்பத்தி செய்தலும்.

(ஆ) கை இயக்கத்தினால் ரப்பர் புகையூட்டுதலும் உற்பத்தி செய்தலும்

(இ) எந்தரத்தினால் அல்லது கை இயக்கத்தினால் ரப்பர் புகையூட்டுதலும் உற்பத்தி செய்தலும்.

(ஈ) செயற்கை உரத்தை அல்லது செயற்கை உரம் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படும் பொருட்களை மூன்று மூடைகளுக்கதிகமாகச் சேரித்துவைத்திருத்தல்.

(உ) செங்கற்கள் அல்லது ஓடுகள் உற்பத்தி செய்தல்.

(ஊ) பற்றறிகளுக்கு மின்னூட்டல்.

(எ) சுண்ணும்பு சுடுதல், சேகரித்து வைத்திருத்தல், பதப்படுத்தல் அல்லது தகர்த்தல் .

(ஏ) மோட்டார் வாகனசாலையொன்று வைத்திருத்தல்.

(ஐ) சுண்ணும்புச் சூளையொன்றுவைத்திருத்தல்.

(ஒ) எந்திரத்தினால் கல் அல்லது கருங்கல் நொருக்குதல்.

3–466—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

---

# உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம்
## (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள் அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிப்பிட்டுள்ள உள்ளூரதிகார சபைகளது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 66 (2) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 10 ந் உ.

அட்டவணை

| வட்டார இல. | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| | **கொழும்பு மாவட்டம்** |
| | மொரட்டுவ நகர சபை |
| 9 .. | குமாரசிங்க ஆரச்சிகே தொன் லொறேன் விவியன் லெனுட் பீரிஸ் |
| | **கண்டி மாவட்டம்** |
| | உடநுவர கங்கபளாத தெற்கு கிராமச் சபை |
| 12 .. | ரத்னுயக்க முதியன்செலாகே ஜயவீர |
| | **இரத்தினபுரி மாவட்டம்** |
| | இரத்தினபுரி மாநகர சபை |
| 9 .. | விஜயசூரிய குணவர்தன மகவதுகே அல்பட் பெரேரா |
| | **ரக்வானை பட்டினச்சபை** |
| 1 .. | வஹும்புரகே சிமியொன் |
| | **குருவிற்ற கிராமச் சபை** |
| 19 .. | கரந்தன முஹந்திரமலாகே ஹீன்மகத்மயா |

3–452—20.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,898

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாச்சு | .. | 5.3.70 | வியாழன் | .. | 27.2.70 | வெள்ளி | .. ந. ப. | 12.00 |
| | | 13.3.70 | வெள்ளி | .. | 5.3.70 | வியாழன் | .. பி. ப. | 3.30 |
| | | 20.3.70 | வெள்ளி | .. | 13.3.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 26.3.70 | வியாழன் | .. | 19.3.70 | வியாழன் | .. பி. ப | 3 30 |
| ஏப்பிறல் | .. | 3.4.70 | வெள்ளி | .. | 25.3.70 | புதன் | .. பி. ப. | 3.30 |
| | | 10.4.70 | வெள்ளி | .. | 3.4.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 17.4.70 | வெள்ளி | .. | 8.4.70 | புதன் | .. பி. ப. | 3.30 |
| | | 24.4.70 | வெள்ளி | .. | 17.4.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 30.4.70 | வியாழன் | .. | 23.4.70 | வியாழன் | .. பி. ப. | 3.30 |
| மே | .. | 8.5.70 | வெள்ளி | .. | 30.4.70 | வியாழன் | .. பி. ப. | 3.30 |
| | | 15.5.70 | வெள்ளி | .. | 8.5.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 22.5.70 | வெள்ளி | .. | 15.5.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 29.5.70 | வெள்ளி | .. | 22.5.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| யூன் | .. | 5.6.70 | வெள்ளி | .. | 29.5.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 11.6.70 | வியாழன் | .. | 5.6.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 18.6.70 | வியாழன் | .. | 11.6.70 | வியாழன் | .. ந. ப. | 12.00 |
| | | 25.6.70 | வியாழன் | .. | 18.6.70 | வியாழன் | .. ந. ப. | 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மாச்சு மீ 5 ஆந் உ..

இலங்கை அரசாங்க அச்சகப்பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.